www.tamilarangam.net

தந்துதவியவர்: தேசம்நெற்

அன்பளிப்பு U.K 40P France: 6FF, Swiss: 2SF, German: 2.00DM

The EelaBhoomi

ஈழபூமி

The Fortnightly Tamil Newspaper in London

இலக்கம் - 16 05-09-1992 - 17-09-1992

# லண்டன் ரூட்டிங் பகுதியில் அதிகரிக்கும் வழிப்பறிகள்

(ரூட்டிங்)

தென் மேற்கு லண்டனில் உள்ள இடமான ரூட்டிங் என்ற இடத்தில் வைத்து தமிழ் வாலிபர் ஒருவர் கறுப்பு இனத்தவரால் தாக்கப்பட்டுள்ளார். இரவு வேலை முடித்து விட்டு வீடு திரும்பிய இவரே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளார் என்று எமக்கு கிடைத்த செய்திகள் தெரிவித்தின்றன.

இச்சம்பவத்தின் போது தமிழ் வாலிபர் திருப்பி தாக்க முனைந்தார் என்றும் அச்சமயம் பதுங்கி நின்ற மேலும் மூன்று கறுப்பு இன வாலிபர்கள் இவரைத் தாக்கியதாகவும் இவர் அணிந்திருந்த கைக்கடிகாரம் உட்பட இருபது பவுண் பணத்தையும் சூறையாடிச் சென்றுள்ளனர் என்று அறிய முடிகிறது.

இதேபோல் சம்பவம் ரூட்டிங் பிரதான வீதியிலும் நடந்துள்ளது. ஆனால் தாக்கப்பட்டவர் ஒரு பெண்மணி. இவர் ஒரு கறுப்பு இனத்தவரால் பட்டப்பகலில் கையில் கொண்டு வந்த பணத்தைப் பறிகொடுத்துள்ளார். இவர் பறிகொடுக்கும் போது பலர் தூரத்திலிருந்து பார்த்த போதும் எதுவும் செய்ய முடியவில்லை.

---

மரணப்பீதியில் இந்தியா வேகமாகப் பரவும் எயிட்ஸ்

பக்கம் 3



பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் இருக்கும் மலையக மக்கள் முன்னணித் தலைவர்களிடமிருந்து உதவிக்கரம் நீட்டும் ஒரு கடிதம்

பக்கம் 2

'மூன்றாவது சினிமா' சிதறல்கள் - சிறுகதை இன்னும் சுவையான அம்சங்கள் உள்ளே.

---

இளம் பெண்கள் மீது பொலிசார் பாலியல் வன்முறை

கூட்டி வந்த முகவர் தலைமறைவு

# 51 தமிழ் அகதிகள் ஹங்கேரியில் அவலநிலை!

## ஹங்கேரி பொலிசார் தகவல் தரத் தயக்கம்

(ஹங்கேரி)

சுமார் 51 தமிழ் அகதிகள் யாரும் கவனிப்பாரற்ற நிலையில் கங்கேரிக் காட்டினுள் கைவிடப்பட்ட சம்பவம் இரு ...ங்களுக்கு முன் நடந்துள்ளது. வெளிநாடுகளுக்கு அனுப்புவதாக கூட்டி வந்த ஒரு முகவர் இவர்களை ஹங்கேரிக் காட்டுப் பகுதிக்குள் கைவிட்டு விட்டு தலைமறைவாகியுள்ளார்.

செய்வதறியாது தவித்துக் கொண்டிருந்த இவர்களது விபரம் ஹங்கெரிப் பொலிசாருக்கு கிட்டவே அவர்கள் அங்கு உடனே விரைந்திருக்கின்றார்கள்.

அவ்விடத்திற்கு விரைந்த பொலிசார் அங்கு காட்டுப் பகுதிகளில் உதவி இன்றி இருந்த அகதிகளுடன் காட்டுமிராண்டித் தனத் தில் நடந்து கொண்டிருக்கின்றனர்.

கைவிடப்பட்ட இவர்களில் பலர் இளம் யுவதிகள் என்றும் இவர்களை பலோற்காரப்படுத்தி பாலியல் வன்முறைக்கு பொலிசார் உட்படுத் தியுள்ளனர் என்றும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக தலையிட்டுப் பிரச்சனையை சுமுகமாக்க தமிழ் நிறுவனங்கள் எடுத் முயற்சியை ஐ.நா. ஸ்தாபனத்தின் அகதிகள் பிரிவான யு.என்.சி.எச்.ஆர் நிறுவனம் இது பற்றி விசாரிக்க மறுப்புத் தெரிவித்து விட்டது.

இருப்பினும் அந்த அகதிகளுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவி வழங்குமாறு வேண்டி லண்டனில் உள்ள தமிழர் தகவல் நடுவம் கோரிக்கை ஒன்றினை விடுத்துள்ளது என்று தெரிய வருகின்றது.

தற்போது இவர்கள் அனைவரும் ஹங்கேரிப் பொலிஸ் கண்காணிப்பின் கீழ் இருப்பதாகவும், இவர்கள் பற்றிய தகவல்களை பொலிசார் கொடுக்கத் தயக்கம் காட்டுகின்றனர் என்றும் மேற்படி சம்பவத்தில் தலையிட்டு தகவலறிய முற்படும் லண்டன் அகதிகள் நிறுவன முக்கியஸ்தர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்ட சம்பவத்தை மூடி மறைக்கும் பொருட்டே பொலிசார் தகவல்களை கொடுப்பதற்கு தயக்கம் காட்டுகின்றனர் என்பது தெரிய

தொடர்ச்சி 5ம் பக்கம்

---

ஐ. நா ஸ்தாபனம் தலையிட மறுப்பு

சுவிஸ், டென்மார்க் உட்பட பல ஐரோப்பிய நாடுகள்

# அகதிகளைத் திருப்பியனுப்பும்

## பலரை வெளியேறச்சொல்லி உத்தரவு.

(நமது நிருபர்)

தமிழீழத்திலிருந்து புலம் பெயர்ந்த அகதிகளை நாடு திருப்பி அனுப்பும் படலம் தொடங்கியுள்ளமை பல தரப்பிலும் பேசப்படுகின்றது. இந்தியா இலங்கைக்கு அகதிகளைத் திருப்பி அனுப்பப்பட்டதன் பின் அதனைத் தொடர்ந்து சுவிஸ்லாந்து முயற்சி செய்தமை யாவரும் அறிந்ததே.

அண்மையில் கிடைத்த செய்திகளின் பிரகாரம் சுவிஸ் லாந்து அரசு தற்காலிகமாக நிறுத்தி வைத்திருந்த நாடு கடத்தும் உத்தரவை மீண்டும் அமுல் படுத்தி உள்ளது என்று தெரிய வருகின்றது.

அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்டு அகதி முகாம்களில் இருக்கும் தமிழ் அகதிகள் 200 பேருக்கு நாட்டை விட்டு வெளியேறும் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது .

சுவிஸ்ஸில் இருக்கும் தமிழ் அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்புவது தொடர்பாக இலங்கை அரசுடன் சுவிஸ் அரசு பேச்சு வார்த்தை நடாத்தியது யாவரும் அறிந்ததே. இவர்கள் தென்பகுதியில் தற்காலிகமாக அமர்த்தப்படலாம் என்று இலங்கை

தொடர்ச்சி 8ம் பக்கம்

---

# போக்குவரத்து பாதைகள் புலிகளால் தடை

(யாழ்)

வடக்கிலிருந்து வவுனியா நோக்கிச் செல்லும் சகல பாதைகளும் புலிகளினால் தடைசெய்யப்பட்டுள்ளது. காரணம் அறிவிக்கப்படாது தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மறு அறிவித்தல் வரை இப்பாதைகள் மூடியிருக்கும் என்றும் மக்கள் இப்பாதைகளை உபயோகிக்க வேண்டாம் என்றும் அவர்கள் கேட்டுள்ளனர்.

இது இவ்வாறிருக்க, கிளாலி ஊடாகப் பயணம் செய்த பெண்மணி ஒருவர்

தொடர்ச்சி 8ம் பக்கம்

---

ஹங்கேரியில் சொல்லனாத் துயரத்திலிருக்கும் 51 தமிழகதிகளின் விடுதலைக்கும் மனிதாபிமான முறையில் அகதி அந்தஸ்து கிடைப்பதற்கும் லண்டனில் இருக்கும் ஸ்தாபனங்கள் அனைத்தும் உரிய நடவடிக்கை எடுக்கு மாறு கேட்டுக்கொள்கிறோம்.

கடிதம் 8ம் பக்கத்தில்

---

கடந்த 23ம் திகதி எமது நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட மும்முனைக் கிரிக்கட் ஆட்டத்தில் கிறன்போட் கழகம் வெற்றியீட்டியது இது பற்றிய முழு விபரங்களும் அடுத்த இதழில் இடம்பெறும்

---

திருமலை நகரில் குண்டு வெடிப்பு

# பஸ்வண்டி சுக்குநூறானது

## பொது மக்கள் பலர் உயிரிழப்பு

(திருமலை)

ஆவணி மாதம் 31 ஆம் திகதி அன்று திருமலை நகர்ப்புற பஸ்தரிப்பு நிலையத்தில் நின்ற பஸ் வண்டிஒன்று குண்டுவெடிப்புக்குள்ளாகியுள்ளது. திருமலையிலிருந்து கொழும்புக்கு செல்ல இருந்த இந்த பஸ்வண்டியில் திடீரென வெடித்த குண்டு வெடிப்பு சம்பவத்தினால் அதில் பயணம் செய்ய இருந்த பயணிகளில் பதினேழு பேர் ஸ்தலத்திலேயே இறந்துள்ளனர்.

40 பேருக்கு மேல் காயமடைந்துள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. இருப்பினும் பத்துப் பேர் மட்டுமே இறந்துள்ளனர் என்று இலங்கை அரசு அறிவித்துள்ளது. பிரித்தானிய பி.பி.சி. உலகச் சேவை செய்திகளின் பிரகாரம் 17 பேர் தலத்திலேயே இறந்துள்ளனர்.

இது தொடர்பான அறிக்கையை எடுக்கச் சென்ற பி.பி.சி. நிருபர் அங்கு சென்று செய்தி திரட்ட அனுமதிக்கப்படவில்லை.

இக் குண்டு வெடிப்புக்கு புலிகள் தான் காரணம் என்று அரசு வழமை போல சாட்டி இருந்தாலும் பிரேமதாஸவிற்கு எதிரான வழக்குத் தோல்வியை அடுத்து நடக்கக் கூடிய எதிர்ப்புக்களை திசை திருப்ப அரசினால் மேற்கொள்ளப்பட்ட சதியே இது என்று அங்கு பரவலாக பேசப்படுகின்றது.

புலிகள் இது தொடர்பாக தமது மறுப்பைத் தெரிவித்துள்ளனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உதவிக்கரம் நீட்டும் ஒரு கடிதம்

மலையக மக்கள் முன்னணி

UP-COUNTRY PEOPLE'S FRONT

TAL 052 – 8286

Head Office :
No. 6, Main Street.
TALAWAKELLE.
SRI LANKA.

அன்புடன்,

தங்களுக்கு கடிதமெழுத சந்தர்ப்பம் வாய்த்ததற்காக பெருமகிழ்ச்சி அடைந்தாலும் இக்கடிதத்தின் நோக்கம் ஒரு விதயக்கத்தையும் ஏற்படுத்தத்தான் செய்கிறது.

நாங்கள் பயங்கரவாத தடை சட்டத்தின் கீ ழ் கைது செய்யப்பட்டு கடந்தஒரு வருடத்திற்கும் மேலாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கின்ற தகவல் சிலவேளை தங்களுக்கு கிடைத்திருக்கக் கூடும்.

மலையகமக்களின்எதிர்காலவிடிவுக்காக, மக்களின் நியாயபூர்வமானஅபிலாஷைகளையும், குமுறல்களையும், வெளிப்படும் எமது நீண்டகால சாபக்கேட்டை முடிவுக்கு கொண்டு வரும் முயற்சியில் நாம் ஜனநாயக ரீதியாக செயற்பட்டு வருவது தாங்கள் அறிந்ததே.

எமது நோக்கங்களை புரிந்து கொண்ட மக்கள் எம்மோடு அணிதிரண்டு எமக்களிக்கும் ஏகோபித்த பேராதரவு நாளுக்கு நாள் பெருகி வருவதை அரசியல் அவதானிகள் ஏற்றுக்கொண்டுள்ளனர். மலையக அரசியல் பற்றிய அவர்களின் விமர்சனங்கள் வெளிப்படுத்துகின்றன.

எமது ஸ்தாபனம் தொடங்கப்பட்ட இரண்டே வருட காலத்தில் நாம் சந்தித்த உள்ளூராட்சி தேர்தல்களில் மலையகத்தின் இரண்டாவது சக்தியாக மக்கள் எம்மை இனங்காட்டி உள்ளார்கள்.

இந்த அரசியல் எழுச்சியையும், மக்களின் விழிப்பு ணர்வையும் கண்டு கிலேசமடையும் சிலரின் அதிகார துஸ்பிரயோகத்தின் வெளிப்பாடே நாம் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டிருப்பதின் பின்னணியாகும்.

நாம் உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்த அடிப் படை மனித உரிமைமீறல் வழக்கில் 'எமது கைதும் தடுத்துவைத்தலும் சட்ட விரோதமானதால் இதற்கான நட்ட ஈட்டுத்தொகையை அரசு எமக்கு வழங்க வேண்டும்' என தீர்ப்பு வழங்கப்பட்டும் கூட நாம் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டிருக் கின்றோம்.

தற்போது 'வரதன் என்பவர் பற்றிய தகவல்களை பொலிசாருக்கு தரத்தவறியதாக' எம்மீது குற்றம் சாட்டி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள்.

எமது வழக்கை பேசுவதற்கு பிரபல சட்டத்தரணிகள் பலர் அரசியல் ரீதியிலான பு ரிந்துணர்வோடு முன்வந்திருக்கிறார்கள். ஆனால் எம் மூவரின் வழக்குகளுக்கும் பெருந்தொகையான பணத்தேவையை (சுமார் 6 லட்சம்) எதிர்நோக்கியிருக்கின்றோம். அத்தோடு எமக்கேற்பட்டுள்ள எதிர்பாராத இந்நெருக்கடிகளினால் ஏற்படும் பொருளாதார சிக்கல்களின் முற்றுகையில் நாம் ஸ்தம்பிதமடையாமலிருக்க சில துரித முயற்சிகளுக்கு திட்டமிட்டுள்ளோம்.

எனவே எம்மோடு மிகவும் புரிந்துணர்வும், நம்பிக் கையுமுள்ள எமது நண்பர்களிடமும், எமது மக்களின் மேல் அனுதாபமும், அபிமானமும் கொண்ட எமது ஆதரவாளர்களிடமும் பொருளாதார உதவிகளை திரட்ட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம்.

வெளிநாட்டில் உள்ள இத்தகைய நல்லவர்களின் பெயர் பட்டியலை நாம் தயாரித்த போது தங்களின் நினைவு எமக்கு ஏற்படுத்திய பெரும் நம்பிக்கையினால் இதனை எழுதுகின்றோம்

நாம் தங்களோடு தொடர்பு கொள்ளும் முதல் சந்தர்ப்பமே இத்தகைய உதவியை கோரும் கடிதமாக அமைவதையிட்டு ஏற்படும் அவமான உணர்வை விட எமக்கேற்பட்டுள்ள நெருக்கடியின் நிர்ப்பந்தம் முக்கியமானதாக இருப்பதால், இது தவிர்க்க முடியாததாகிறது.

தயவு செய்து எங்களின் தேவையின் நியாயத்தையும், வேண்டுகோளின் அவசியத்தையும் புரிந்து கொண்டு உங்களின் உளப்பூர்வமான நன்கொடையை ' Bank of ceylon A\C NO :1410 TALAWAKELLE"

இந்த தகவலை தயவு செய்து உங்களின் நண்பர்களிடமும், நல்ல உள்ளம் படைத்தவர்களிடமும் எடுத்துக்கூறி அவர்களின் உதவிகளையும் பெற்று கொடுக்க சிபார்சு செய்து உதவுங்கள்.

தங்களின் மனநிறைவுதரும் பதிலையும், ஆறுதலைத்தரும் உதவியையும் ஆவலோடும், அவசரமாகவும் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம்.

நம்பிக்கையோடு,

பெ. சந்திரசேகரன்
தலைவர்,

பி. வி. கந்தையா
செயலாளர் நாயகம்

வி. டி. தர்மலிங்கம்
உப தலைவர்,

## மூன்றாவது சினிமா. . 9ம் பக்கத் தொடர்ச்சி

சிதம்பரம் பட்த்தை தந்த அரவிந்தன் இ.எம்.பிஸ் பூம்பூதிரிப் பாட்டைப் பற்றி டாகுமெண்டரி தயாரிக்க வேண்டும் என திட்டமிட்டது மூன்றாவது சினிமா.

தாரிக் அலி மூன்றாம் உலக கலாச்சாரப் பிரச்சனைகளை விவரிப்பதும் இசையோடு வெளிக்கொணர்வதும் மூன்றாவது சினிமா.

இவைகளை நீங்கள் எந்த அகன்ற திரையிலும் பார்க்க முடியாது.

இலத்தீன் அமெரிக்க படத் தயாரிப்பாளர்களின் பெரும்பான்மையான படங்களை நாம் அகன்ற திரைகளில் பார்க்க கிடைக்காது. மூன்றாம் உலக அரசியல் சினிமாவின் அறிமுகம் என்பது ஒப்புக் கொள்லப்பட்ட அர்த்தத்தில் சினிமாத் தன்மையுடன் இருக்கும் படங்களைப் பற்றிய அறிமுகமாகவும் அதே சமயத்தில் அதன் போராட்ட மனிதர்கள், சம்பவங்கள், பிரச்சனைகள் பற்றிய அறிமுகமாகவே இருக்கும்.

சிறிய அளவில் பொருளாதார ரீதியில் சிக்கனமாகவும் சினிமா முதலைகளுக்கு எதிர்ப்போடும் கொண்டுவரப்படும் படங்களின் அறிமுகமாகவும் இது இருக்கும் .

சத்திய ஜித்ரேவின் பாலா படத்திற்கும் தாகர் பற்றிய படத்திற்கும் ஸியாம் பெனிகலின் ரேடுபற்றிய படத்திற்கும் வெறும் செய்தித் தன்மை மட்டும் இல்லை. தற்காலிகத் தன்மை மட்டும் இல்லை.

இந்தத் தற்காலிகத் தன்மையை தாண்டிய தத்துவ அரசியல் கலாச்சாரப் பிரச்சனை மூன்றாம் உலக நாடுகளின் படங்களில் இருக்கின்றது.

இனி வரும் கட்டுரைகளில் பெண்கள் சினிமா ஆபிரிக்க சினிமா, லத்தீன் அமெரிக்கச் சினிமா, பாலஸ்தீனிய சினிமா, மத்திய கிழக்கு சினிமா இவற்றோடு ஐரோப்பிய நாடுகளின் மூன்றாவது சினிமா மரபை வளர்த்த இடது சாரி இயக்குனர்கள் பற்றியும் அவர்களின் படங்கள் பற்றியும் பார்த்தோம். இந்தச் சந்தர்ப்பத்தில் இம்மாதிரிக் கட்டுரைத் தொடர் ஒன்று எழுதுவதற்கான உத்வேகத்தை எனக்குத் தந்த ஈழபூமி நண்பர்களுக்கு என் அன்பையும் நன்றியையும் கட்டாயம் சொல்லவேண்டும்.

இனித் தொடர்ந்து உங்களோடு பேசுவேன்.

## பொதுமக்கள் பலர் பலி . 12ம் பக்கத் தொடர்ச்சி

பஸ் வண்டியில் வெடித்த குண்டுச் சம்பவத்தில் இறந்தவர்களில் மூன்று பேர் மட்மடுமே அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இது இவ்விதமிருக்க திருமலை மாவட்டத்தில் இம் மாதம் முதலாம் திகதி முற்றாக அகதிகள் முகாமிலுள்ள 36 குடிசைகள் தீப்பிடித்து எரிந்துள்ளது.

முஸ்லிம் அகதிகள் தஞ்சமடைந்திருந்த இக்குடிசைகள் தீப்பற்றி எரிந்த போதும் எவரும் காயமடையவில்லை.

கடந்த இருவாரங்களாக நடைபெற்று வரும் இப்படிப்பட்ட மர்ம தீவிபத் துக்கள் பல இடங்களிலும் நடந்துள்ளன. வவுனியா தாண்டிக்குளம் அகதிகள் முகாம் குடிசைகள், திருமலை மாவட்டத்தில் உள்ள சிங்கள மீனவ குடிசைகள், திருமலை தமிழ் கிராமங்களில் இருக்கும் பல குடிசைகள் இவ்வாறு தீப்பிடிந்து எரிந்தமை குறிப்பிடத்தக்கது.

## பத்து ஹொறிகளுக்கே . 12ம் பக்கத் தொடர்ச்சி

ளை என்று அரசியல் அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளனர். 4000 மேற்பட்ட அப்பாவி மக்களை அடைத்து வைத்திருக்கும் புலிகளுக்கு 42 பேரை வைத்து பராமரிப்பது கடினம் என்று கூறியிருப்பது வெறும் பகட்டுத்தனம் என்று கருதும் இவர்கள் இது இன்னொரு விதத் தில் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் நடக்கும் இரகசியப் பேச்சுக்களின் வெளிப்பாடே என்றும் கூறியுள்ளனர்.

இம்மாதம் இரண்டாம் திகதி அன்று இந்தியாவில்

தொடர்ச்சி 8ம் பக்கம்

மலிவு விலையில் ஆட்டு இறச்சி, கோழி இறச்சி
உலகின் அனைத்து பாகங்களிலுமிருந்து தமிழில் வெளிவரும் சஞ்சிகைகள், இலங்கையில் வெளியாகும் தமிழ், ஆங்கில வாராந்தப் பத்திரிகைகள்
இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சகல விதமான உணவுப்பொருட்களையும்
மலிவான விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

SPICEWAY
21-23 Kingston Road, South Wimbledon London SW19 1JX
(Near to South Wimbledon Underground Station)
We Sell
Halal Meat, Chicken, Tropical Food, Vegitables & All Kind of Fish Imported from Srilanka With SriLankan & Indian Newspapers, Magazines, Audio, Video, Compact Disc ... More & More Items
For Futher Details Ring us On 081 540 5526

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

The EelaBhoomi

# ஈழபூமி

இல-16 04-09-1992 -- 17-09-1992

# தந்தையாகிய கொப் (பே) பா!

மீண்டும் எமது போராட்டத்திற்கு ஒரு அவமானம். நாம் தமிழர்கள் என்பதை ஏனோ அடிக்கடி மறந்து விடுகின்றோம். அண்மையில் நடந்த சம்பவம் ஒன்று எமது மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமை என்றே கருதவேண்டும். அதுவும் முன்னொரு காலத்தில் தமிழீழ விடுதலைக்காக தம்மை அர்பணித்துக் கொண்ட அமைப்புக்கள் மூலமே அந்த இழுக்கு என்று கூறப்படும் போது அது எம் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட மொத்த துரோகம் என்றே சொல்ல வேண்டும்.

சில வாரங்களுக்கு முன் ஊர்காவல் துறையில் உள்ள அராலித்துறை என்ற இடத்தில் வைத்து கண்ணி வெடிச் சம்பவம் ஒன்றில் கொல்லப்பட்ட ஒன்பது அதிகாரிகளில் ஒருவரான கொப்பேகடுவ என்பவர் பற்றிய சர்ச்சையே இந்த துரோகச் செயலின் அடித்தளமாகும்.

கொப்பேகடுவ கொல்லப்பட்டார் என்ற போது ஒவ்வொரு தமிழ் பேசுவோரின் மனதிலும் ஆனந்தம் பொங்கி வழிந்து கொண்டிருந்த சமயம் கொழும்பிலே இருக்கும் குழுக்கள் வேதனைப்பட்டார்கள் என்ற செய்தி பத் திரிகைகளிலும் இலங்கை வானொலியிலும் தவழ்ந்தபோது ஐரோப்பிய வாழ் தமிழர்களை அது ஒரு உலுக்கு உலுக்கியிருக்கும் என்பதில் ஐயமில்லை.

கொப்பேகடுவ எமது தந்தை. அவர் ஒரு நேர்மையான மனிதர். அவர் தனிப்பட்ட முறையில் தமிழர்களுக்கு கொடுமை புரியவில்லை. இப்படி அவருக்கு புகழாரம் எமது தமிழ் குழுக்களாலேயே குவிக்கப்பட்டபோது வெளிநாட்டு நிறுவனங்கள் திகைத்துப் போயின.

வவுனியா ஈரப்பெரிய குளம் முகாமுக்கு சாதாரண கப்டன் ஆக மாற்றம் செய்யப்பட்ட கொப்பேக்கடுவ, கிளிநொச்சிக்கு பதவி உயர்த்தப்பட்டு அனுப்பப்பட்டதிலிருந்து வடமராட்சி லிபரேசன் ஒப்பரேசன், ஆனையிறவு முகாம் தாக்குதல் முறியடிப்பு தொடக்கம் தமிழ் இனத்தை அழித்து ஒழிக்க ஜே.ஆர். அரசு முதல் பிரேம தாஸ வெறியாட்டம் வரை உறுதுணையாக இருந்தவர் தான் இந்தக் கொப்பேக்கடுவ என்பதை எமது அன்பார்ந்த தமிழ்க் குழுக்களின் தலமைகளின் தலைகள் புரட்டிப் பார்க்க ஏன் தவறினவோ யாம் அறியோம்.

ஆனையிறவிலே 800 க்கும் மேற்பட்ட விடுதலைப் புலி வீரர்களை கொன்று குவித்த வரை, கிளிநொச்சியில் 500 மேற்பட்ட இளைஞர்களைப் பிடித்து சித்திரவதை செய்து அடைத்து வைத்து மனித வதை செய்தவரை, வடமராட்சி லிபரேசன் ஒப்பரேசனில் அப்பாவி தமிழ் மக்களை கொன்று குவித்து தன் திறமையை வெளிக்காட்ட முனைந்தவரை எமது குழுக்கள் தந்தை என்றதன் அர்த்தம் எமக்குப் புரியவில்லை.

வடமாகாணத்தின் முப்படைத் தளபதியாக ஒருவர்- அதுவும் மனிதாபிமானத்துடன் செயலாற்றி- பதவி உயர்வு பெற முடியும் என்று கூறினால் தமிழர்களுக்கு இலங்கையில் எந்தவிதப் பிரச்சனையும் இல்லை என்று கூறுவதற்கு ஒப்பாகி விட்ட செயலாகாதா?

வயிற்றுப் பிழைப்புக்காக கொழும்பைச் சுற்றி ஊர்வலம் வரும் தமிழ்க் குழுக்களின் தலைகள் எமது சமுதாயத்திற்கு இழைக்கும் துரோகத் தனங்களை சிந்தித்துப் பார்க்க வேண்டும். கொழும்பு பாதுகாப்பான இடம் என்பதற்காக ஆக்கிரமிப்பு இராணுவத்தின் தலைவனாக இருந்தவனை தந்தை என்று கூறிவிடலாம் என்று நினைக்க வேண்டாம். இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது நாஸிப் படைகளுடன் இருந்தவர்கள் இன்றைய காலகட்டத்தில் தண்டிக்கப்படும் போது இந்தத் தலைகள் தப்பி விடலாம் என்று கணக்குப் போடுவது தவறாகும்.

... இன்னமும் எதிர்த்து நிற்கமுடியாத கிருமி. இப்போதெல்லாம் வைரஸ் என்று கூறும் போது எமக்கெல்லாம் ஞாபகத்திற்கு வருவது எயிட்ஸ்.

இந்த எயிட்ஸ் எப்போது தோன்றியது என்பது யாருக்கும் தெரியாது . அதே போல எத்தனை போரின் உயிரைக் குடித்துக் கொண்டிருக்கின்றது என் பதும் யாருக்கும் தெரியாது. இன்று வரை தடுப்பு மருந்து கிடையாத ஒரு நோய். மனித உடலில் உள்ள இழையங்களில் புகுந்து போராடும் இந்த எயிட்ஸ் நோய்க்கான வைரஸ். காலப்போக்கில் தன் வெற்றியை மனித உடலில் நிலை நாட்டிக் கொள்கின்றது. உடல் இழையங்கள் சிதைவடைய தொடங்குகின்றன. இந்தச் சிதைவு இறுதியில் மனித வாழ்க்கையை முடித்து வைக்கின்றது.

# மரணப்பீதியில் இந்தியா

இப்போது வெளியாகி இருக்கும் தகவல்கள் இந்தியாவை மட்டும் திகைக்க வைக்கும் செய்தி அல்ல. ஆசியாவையே திடுக்கிட வைக்கும் தகவல் அது. எயிட்ஸ் விபச்சாரத்தின் ஊடாக இந்திய மக்களிடம் வெகுவாகப் பரவுகின் றது.

அறியாமை, அரசாங்கத்தின் தலையிடாமை இப்படியே அடுக்கக் கூடிய காரணங்களினால் எயிட்ஸ் தனது கடமையை முடித்துக் கொண்டிருக்கின்றது.

டொக்டர் சுபாஸ் ஸலுங்கியின் அலுவலக அறையினுள் அண்மையில் வெளியான எயிட்ஸ் பற்றிய புள்ளி விபரம் சுவரிலே தொங்க விடப்பட்டிருந்தது. அவை உத்தியோக பூர்வமாக அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட புள்ளி விபரம். 194 பேர் இந்தியா முழுவதிலும் சேர்த்து முழுமையாக பாதிக்கப்பட்டு இறந்து கொண்டிருக்கின்றார்கள். மகராஸ்ரா மாநிலத்தில் பரீட்சிக்கப்பட்ட நோயாளிகளில் ஐந்து வீதமானோர் எந்தக் கிருமியைக் காவித் திரிகின்றார்கள் என்பது வெளியா4கியுள்ளது. இப்படி பரீட்சிக்கப்பட்டவர்கள் 142,447 பேராகும்.

டொக்டர் சுபாஸ் சொல்கிறார் 'எங்களுக்கு தெரியாது எப்படி எயிட்ஸ் இவ்வளவு பெரியளவில் பரவியது' என்று. ஆனால் அங்கே இன்னும் நாம் அறியவேண்டியது நிறைய இருக்கின்றது.' என்கின்றார் மகராஸ்ரா மாநில சுகாதார இணைப்புச் செயலாளர்.

அரச சுகாதார திணைக்களங்களுக்கு வெளியே, தனியாக இயங்கும் சுகாதார ஸ்தாபனமான 'இந்திய சுதந்திர சுகாதார நிறுவனம்' வெளியிட்டிருக்கும் அறிக்கையின் பிரகாரம் இதுவரை 20000 பேர் எயிட்ஸ் நோயினால் இறந்துவிட்டார்கள். பத்து லட்சம் பேர் இந்த நோய்க் காவிகளாக இருக்கின்றார்கள். 50000 பேர் இறக்கும் தருவாயில் உள்ள நிலையை அடைந்து விட்டார்கள்.

டொக்டர் சுபாஸின் புள்ளி விபரத்தினைப் போன்று இவை பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை இல்லாவிட்டாலும் இந்திய சனத்தொகையை ஒப்பிடும் கால் அவை அர்த்தமுள்ளவையாக இருக்கின்றது.

எயிட்ஸ் இந்தியாவில் அலைபோல் பரவுவதற்கு முதல் காரணியாக இருப்பது விபச்சாரம் அத்தோடு ஊசி மூலம் போதை பாவிப்பது, இரத்த வங்கிகளில் இருக்கும் சுகாதார முறையில் பெறப்படாத குருதி இவற்றிற்கெல்லாம் மேலாக அறியாமை போன்றவை, காரணிகளாக இருப்பினும் இந்திய மனித சமுதாயம் எப்படி எயிட்ஸ் நோயினைக் கடன் பெற்றுக்

## வேகமாகப்பரவும் மனித கொல்லி எயிட்ஸ்

கொள்கின்றது. என்பதை அவதானிக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளன. பம்பாயில் உள்ள சிவப்பு விளக்கு பகுதியான கமாட்டிபுரத்தில் விபச்சாரத்தின் மூலம் இது வெகுவாகப் பரவுகின்றது. 25 வீதத்திற்கும் மேற்பட்டவர்கள் (பெண்களை படுக்கைக்கு வாடகைக்கு அமர்த்துவோர்) ஒரு நாளைக்கு குறைந்தது மூன்று தடவைகள் உடலுறவு கொள்கின்றார்கள். இங்கே இந்திய பணத்தில் 15 ரூபாய்களுக்கு ஒரு பெண்ணை ஒரு மணி நேரத்திற்கு வாடகைக்கு பெற்றுக் கொள்ள வசதிகள் இருக்கின்றது.

டொக்டர் ஜிலடாவின் கருத்தின் படி கமாட்டிபுரத்தில் மட்டும் 100000 விபச்சாரிகள் இருக்கின்றார்கள்.


இதனைப் பற்றி ஆராயும் ரிரெக் பிறவுன் என்னும் பிரித்தானிய நிருபர் கூறுகின்றார் கமாட்டி புரம் தகவல்கள் எழுத்தில் வடிக்க முடியாத அளவுக்கு மேல் ஆபத்தான நிலையில் இருக்கின்றது.



கமாட்டி புரத்தின் ஒவ்வொரு தெருவிலும் வரிசையில் வெளிறிய தோற்றத்தில் விபச்சாரிகள். பெரும்பாலானவர்கள் கம்பிக் கதவுகளைக் கொண்ட கடைகளுக்குள்.

அதிகமான பெண்கள் அவர்களது இருபது வயதைத் தாண்டாத நிலையில் இருப்பவர்கள். மிகுதிப் பகுதி ஐம்பதுகளில் இருப்பவர்கள் போல் தோன்றுகிறார்கள். உண்மையில் அவர்கள் செய்யும் தொழிலின் நிமித்தம் சோர்வடைந்து போனதால் ஏற்பட்ட தோற்றமே தவிர அவர்கள் யாவரும்

தொடர்ச்சி 8ம்பக்கம்




'இந்தா பார்! நான் என்னமோ எனக்கு மனம் பொறுக்க முடியாமல் தான் இதெல்லாம் உன்னோடு கதைக்கிறது. நீ கேட்டிட்டு பேசாம இரு. நீ சும்மா வாயைக்கொடுத்திட்டு வம்பில மாட்டாதை. இங்கெல்லாம் இப்போ சி.ஐ.டி இருக்கு தெரியு மோ, இவனுகளுக்கு துப்பறியும் திறமையே கிடையாது. தங்களை சி.ஐ.டி என்று காட்டுவது மட்டும் தான் தெரியும்.நீ ஒன்று சொல்ல, அவனுகள் தங்களுக்குப் புரிஞ்ச பாணியில் ஒன்றுக்குப் பத்தாகச் சொல்லி விடுவாங்கள்' என்று கூறும் போது ஏதோ பாசமேலீட்டில் நா தழுதழுக்க அவன் கண்கள் நீர் முட்டி நிறைந்தது.

சங்கர் பூபாலனை நெருங்கி நோக்கினான்.

அவன் பெரிய கண்கள் குளம் போல கலங்கி நின்ற பாச உணர்வை அன்போடு ஏற்றுக்கொண்டான்.

பூபாலனின் மெல்லிய இதயத்தை எப்பொழுதோ அவன் இனம் காட்டிய அந்த சம்பவத்திற்குப் பின்பு சங்கர் இன்று தான் அவன் கண்ணீரை மீண்டும் தரிசித்தான்.

முகாமிற்கு வந்து ஒரு வாரத்தின் பின் அந்தச் சம்பவம் நடந்தது.

எல்லோரையும் வரிசையில் வரச் சொல்லி விட்டு தனித்தனியாக அவர்கள் குடும்ப அங்கத்தவர்கள் பற்றி விசாரித்து அவசர அவசரமாக எழுதிக் கொண்டிருந்தார்கள். பூபாலனுக்கு அடுத்து சங்கர் வந்து கொண்டிருந்தார்கள். பூபாலனின் விபரங்களைக் கேட்டு எழுதிக் கொண்டிருந்தார்கள். சங்கர் அடுத்துக் காத்திருந்தான்.

திடீரென்று பூபாலன் விம்மி அழுது அங்கு இருப்பவர்களை கலவரத்திலாழ்த்தினான்.

அட்டென்சன் பொசிசனில் விறைப்பாக நின்று கொண்டு வழிந்தோடும் கண்ணீரை தடுக்கவும் முடியாமல் அவன் பரிதாபமாக அழுதபோது எல்லோரும் என்னவோ ஏதோவென்று கலங்கி நின்றார்கள். பின்புதான் அவன் அழுகைக்கான காரணம் தெரிந்தது.

மூன்று தங்கைகளின் பெயரையும் பூபாலனிடம் கேட்டபோது அவன் ஏனோ: அவர்களை நினைத்து அழுகை தாங்காமல் இப்படி விம்மி பொருமியிருக்கிறான். அன்றிலிருந்து சங்கருக்கு பூபாலன் மேல் இணம்புரியாத கழிவிரக்கம் பிறக்கும்.

ஆனால் அவன் யாருடைய இரக்கத்தையும், அனுதாபத்தையும் விரும்புபவன் அல்ல ,என்பது பின்பு அவனது போக்கில் இருந்து கண்டு கொண்டான்.

இன்று அவன் மென்உணர்வுகள் வெளிப்படும் அளவிற்கு சங்கர் அவன் இதயத்தை ஆட்கொண்டதை நினைக்க சங்கருக்கு பெருமையாக இருந்தது.

எப்பொழுதும் சங்கரில் ஆழ்ந்த அன்பை அவன் [illegible]படுத்துவான்.

இரண்டாம் பிளட்டூன் சார்ஜன்டாக சங்கர் நியமனம் பெற்ற பின்பு பூரிப்புடன் அவன் கைகளைப் பற்றிக்கொண்டு கூறினான். 'இங்கு உள்ள பிளட்டூன் சார்ஜன்டுகளில் பந்தம் பிடிக்காமல், திறமையால் இந்த இடத்தைப் பெற்றது நீ மாத்திரம் தான். இனிமேல் தான் நீ மிகவும் கவனமாக இருக்க வேண்டும்' இனிமேல் உன்னைக் கவிழ்த்து விடுவதில் தான் இங்குள்ளவர்கள் எல்லாம் குறியாக இருப்பார்கள்.

சங்கருக்கு அவன் பிளட்டூணின் கீழ் உள்ள சகலரும் ஒன்றாக ஒத்துழைப்பு கொடுத்தார்கள். காலையில் கண்விழிக்கப் பிந்துபவர்களுக்கும், ஒழுங்காக படுக்கை மடித்து வைக்காதவர்களுக்கும் தண்டனைகள் வழங்குவதில் கண்டிப்பாக இருப்பான். அந்த தண்டனைகளால் அவர்கள் மனம் புண்படாமல் இருக்கும் வகையில்: ஓய்வு வேளையில் அவர்களுடன் நெருங்கிப் பழகிப் பொழுதைக் கழிப்பான்.

அவன் பிளட்டூனில் சச்சரவு எதுவும் அவனைத் தாண்டி வெளியே செல்வது அபூர்வம். அவனது தீர்ப்பிலேயே இரு பகுதியும் திருப்தி காண்பார்கள். அவன் பிளட்டூன் சார்ஜன்ட் பொறுப்பெடுத்த பின்னால் அவர்களுக்கிடைடிலான கைகலப்பு கூட குறைந்தே வந்தது.

மாலை நேரப் பயிற்சி முடிந்து, குளிக்க துவாயுடன் செல்லும் போது முகாம் பொறுப்பாளர் அவனை அழைப்பதாக தகவல் வந்தது.அவசர அவசரமாக அங்கு சென்ற போது அனைத்து முகாம்களின் பொறுப்பாளரும் உடனிருந்தார். இராணுவ சல்யூட்டை செய்து அவருக்கு மரியாதை தெரிவித்த பின்பு அட்டென்சன் பொசிசனில் விறைப்பாக நின்றான். அனைத்து முகாம்களின் பொறுப்பாள்ர அவனை நன்றாக உற்றுப் பார்த்து விட்டார்.

"உமது அப்பா தமிழரசுக் கட்சியில் போராட்ட வீரராக இருந்தவரா?"""

'இல்லை அவர் கொம்யூனிஸ்ட் கட்சியிலதான் இருந்தவர்'

அவர் முகம் ஆச்சரியத்தால் கறுத்து சுருண்டது. 'கொம்யூனிஸ்டுகளுக்கெல்லாம் இப்பொழுதுதான் தமிழுணர்வு வந்திருக்கிறது' அவர் அருகில் இருந்த முகாம் பொறுப்பாளரிடம் கிண்டலாக கூறிவிட்டு இவனிடம் சொன்னார்.

உமது அப்பாவிடமிருந்து கடிதம் ஒன்று வந்திருக்கிறது. அந்தக்கடிதம் பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டியிருப்பதால் அதைப்பத்திரப்படுத்தி வைத்திருக்கிறோம். இந்தாரும் கடிதத்தின் போட்டோஸ்டட் பிரதி."

அவன் அதே விறைப்போடு அவர் தந்த கவரை பெற்றுக்கொண்டார்.

'நீர் போகலாம்'

திரும்பவும் அவருக்கு சல்யூட் செய்துவிட்டு அங்கிருந்து வெளியேறினான்.பரபரப்போடு கவரைக் கிளித்து கடிதத்தைப் பிரித்தான்.அப்பாவின் கூரான சரிந்த எழுத்துக்கள்அவனைப் பரவசப்படுத்தி தடுமாறச்செய்தது.

அமைதியான ஒரு இடத்தை தேடி அமர்ந்து கொண்டு தனிமையில் அதைப்படித்தான்.

அந்தக்கடிதம் பத்திரிகையில் வேறு வரப்போகிறது என்ற பூரிப்பும் அவனுக்கு தேனாய் இனித்தது.

அன்பு மகனே!!

நீ இங்கிருந்து போன பின்பு தான் உன் அம்மாவிற்கு அது எவ்வளவு புத்திசாலித்தனமான முடிவு என்று தெரிந்திருக்கிறது.

இங்கு இராணுவத்தின் வெறியாட்டம் அளவு கடந்து போய் விட்டது. வீதிக்குப் போனவர்கள் திரும்பி வரும் வரையில் அவர்கள் உயிருக்கு உத்தரவாதம் இல்லை. வீட்டில் இருப்பவர்களுக்கு கூட பாதுகாப்பென்பது கிடையாது. இராணுவம் எந்த நேரத்திலும் என்ன வேண்டுமானாலும் செய்யும். தெருவில் நாய்களைச் சுடுவது போல இங்கு மனிதர்களைச் சுட்டுத்தள்ளுகின்றார்கள். உன்வயது இளைஞர்கள் அறிமுகஅட்டை இருந்தாலும், இல்லாவிட்டாலும் உடனே கைது செய்து விசாரணை என்று கொண்டுபோய் விடுகின்றார்கள். அப்படிக் கொண்டுபோன இளைஞர்கள் எல்லோரும் விசாரணையின் பின் திரும்பி வருவதில்லை. அப்படி வந்தாலும் நரம்புத்தளர்ச்சிக்குள்ளாகும் ஊசிமருந்துகள் ஏற்றப்பட்டதால் நோய் வாய் பட்டவர்களாக மாறி விடுகின்றார்கள்.

ஒரு கிராமத்தைச்சுற்றி இராணுவம் தேடுதல் நடத்துகின்றதென்றால் அந்தப்பிராந்தியமே நிலை குலைந்து போய்விடுகின்றது. தேடுதல் என்றபெயரில் விலை உயர்ந்த பொருட்கள் கொள்ளையடிக்கப்படுகின்றன. ஆன்தள் இல்லாத வீடுகளில் பெண்களிடம் இவர்கள் விடும் சேஷ்டைகள் எழுதக் கை கூசுகின்றது.

இவர்களுக்கு தமிழர்கள் என்றால் அதுவும் ஒரு மனித இனம் என்ற உணர்வே மரத்துப்போன மிருக வெறியர்களாக மாறி விடுகின்றார்கள். தமிழர்களைக் கொடுமைப்படுத்துவது பற்றி இவர்களுக்கு மானுட உணர்வு உறுத்தலை கொடுப்பதே இல்லை. கடந்த காலத்தில் இந்த சிங்கள இனவாத கொடூரத்தை புரிந்து கொள்ளாமல் ஐக்கியப்பட்ட புரட்சிக்கு உழைத்த கம்யூனிஸ்ட்டுகளை நினைக்க இப்பொழுதும் பரிதாபமாக இருக்கிறது.

நான் எழுதுவதிலிருந்து எங்கள் வீட்டில் எனக்கோ அம்மாவுக்கோ அல்லது உன் தம்பி தங்கைக்கோ ஆபத்து ஏதும் வந்து விட்டதோ என்று கலங்காதே, அப்படி ஏதும் நடக்கவில்லை ஆனால் நாட்டில் நடக்கும் ஒவ்வொன்றும் நம் வீட்டிலும் நடக்கின்றன என்ற உணர்வு ஒவ்வொருவருக்கும் இருக்கவேண்டும், அல்லவா.

என்அன்பு மகனே! இதை மாத்திரம் எப்பொழுதும் நினைவில் வைத்துக்கொள்.

மனித வாழ்வு எவ்வளவோ மகத்தானது. ஒரு மனிதன் தன் அனுபவத்திரட்சியை ஆற்றலை இந்த சமூகத்திற்கு கையளிக்கின்றானே அதுதான் மனித வாழ்விலே உயர்வானது. வேறு எந்த ஜீவனுக்கும் மனிதன் போலத் தான் வாழும் சமூகத்திற்காக எதையும் கொடுக்க முடியாது. நாம் விரும்பியோ விரும்பாமலோ எமது மூதாதையர் தந்த அறிவையும், அனுபவ திரட்ச்சியையும் ஒவ்வொருவரும் பயன் படுத்திக்கொண்டிருக்கிறோம். ஆகையால் இந்த பங்களிப்புகளிலெல்லாம் எமக்கு ஈடுபாடு இல்லை என்று யாரும் சும்மா இருந்துவிட முடியாது. நாம் நிச்சயம் சமூகத்திற்கு எம் ஆற்றலையும் அறிவையும் வழங்க கடமைப்பட்டிருக்கிறோம்.

வீட்டில் உன் தம்பி தங்கைகளுக்கு நீ இப்பொழுது என்ன செய்கிறாய், எங்கிருக்கிறாய் என்பது ஒரளவிற்குத் தெரியு ம். அவர்கள் இன்னும் நாட்டு நிலைமைகள் புரியாத குழந்தைகள் இல்லை. அவர்கள் உன்னை நினைத்துப் பெருமைப்படுகிறார்கள். ரகசியங்களை வெளிவிடாமல் காக்கும் அளவிற்கு அவர்களும் பக்குவப்பட்டு வருகின்றார்கள். அவர்களை நினைத்து நீ கலங்காதே.

எங்களது ஆசை எல்லாம் நீ மேற்கொண்ட இலட்சியத்தை ஒழுங்காக நிறைவு செய்து நாட்டிற்கு பயன்பட வேண்டும் என்பதே. உங்கள் கழகம் பற்றி இங்கு நல்ல செல்வாக்கு இருக்கிறது. வீடு வீடாக பிரச்சாரம் செய்கின்றார்கள். தங்களது உணவுத் தேவைக்கு மக்களிடமே தங்கி நிற்கின்றார்கள். ஒவ்வொரு வீடாகச்சென்று உணவுப்பார்சல்களைச் சேகரித்து அவர்கள் கொண்டு செல்லும் காட்சி உண்மையில் பெருமைப்படக் கூடியதாகத்தான் இருக்கிறது. சாதி வித்தியாசம் பாராமல் எல்லாவீடுகளிலும் அவர்கள் நடந்து கொள்கிறார்கள்.

உன் அம்மா கூட அப்பொழுது அரசியல் நடவடிக்கையென்று வீதிக்கு வந்துவிட்டாள். தெரியுமா. நான் கூட இவ்வளவு நாளும் அவளை என் மனைவியாக பார்த்தேனேயல்லாமல் சமூகப்பொறுப்புள்ள பெண்ணாகக் காணத்தவறிவிட்டேன். ஒரு வாரத்திற்கு முன்னால் இந்த அதிசயம் நடந்தது.

காலையில் சந்தைக்குப் போன உன் அம்மா மாலை வரை வீடு திரும்பவில்லை. வேலை முடிந்து நான் வந்த போது உன்தம்பி பயத்துடன் இதைக் கூறினான். எங்கு போய்த் தேடுவது என்று தெரியாமல் குழம்பிப்போய் இருந்தேன். இறுதியில் மாலை ஆறுமணிக்குப் பின்புதான் அவள் வந்தாள். எங்கே போயிருந்தாள் தெரியுமா. இடம் பெயர்ந்த

**ஒரு கிராமத்தைச் சுற்றி இராணுவம் தேடுதல் நடாத்துகின்றது என்றால் அந்தப் பிராந்தியமே நிலைகுலைந்து விடும். தேடுதல் என்ற பேரில் விலை உயர்ந்த பொருட்கள் கொள்ளை அடிக்கப்படுகின்றன.**

தொடர்ச்சி 9ம்பக்கம்

வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள், விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. தொடர்புகட்கு
The Eelabhoomi Puplications
Unit 2. (Publishing Division)
Glenville Mews
Kimber Road
London SW18 4NJ

www.tamilarangam.net



# ஊரடங்கு உத்தரவு நீக்கம்

பலாலிப்பகுதியில் பலத்த பீரங்கித் தாக்குதல்கள். 12 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் பலி. பல வீடுகள் பலத்த சேதம்.

இராணுவத்தின் 'நிலநடுக்கம்' தாக்குதல்கள் முடிவுக்குவந்தன.

யாழ்குடா நாட்டில் 20ம் திகதி முதல் அமுலில் இருந்த ஊரடங்குச் சட்டம் நீக்கம். 21ம் திகதி மூன்று முஸ்லீம் கிராம மக்கள் கொல்லப்பட்டதை அடுத்து அம்பாறை எல்லைக் கிராமம் தோறும் இராணுவம் பலத்த தேடல் பல அப்பாவி இளைஞர்கள் கைது. பலர் இராணுவத்தினால் தாக்கப்பட்டனர் . மட்டுநகரில் 'கெட்டப்போல்ட்டால்' கெலிக்கப்டரைக் குறிபார்த்து விளையாடிய சிறுவனை நேக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் சிறுவனுக்குப் ந்த காயம்.

# முல்லைத்தீவில் மோதல் இருதரப்பிலும் சேதம்

இராணுவம் நிலநடுக்கம் தாக்குதலால் கைப்பற்றப்பட்ட பகுதிகளில் மேலும் இராணுவநிலைகளை அமைத்து தனது நிலைகளை ஸ்திரப்படுத்தியது. முல்லைத்தீவில் புலிகள் இராணுவம் கடும் மோதல் புலிகள் தரப்பில் 7பேர் பலி என அரசு அறிக்கை. இராணுவதரப்பில் பலர் பலி எனவும் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாகவும் புலிகள் அறிக்கை. திரிகோண மலையிலும் புலிகள் பதுங்கியிருந்து தாக்கியதில் பல இராணுவத்தினர் காயமடைந்தனர்.யாழ்க்குடாவில் கைப்பற்றப்பட்ட பகுதிகளில் பொலிஸ் நிலயங்களை அமைக்க யாழ் பொலீஸ் உயரதிகாரிகள் கூடி ஆராய்ந்தனர். தனர்.

# நாவற்குழியில் குண்டுவீச்சு

26-8-92 புதன்கிழமை.

தொடர்ந்தும் வடபகுதியில் அரச படைகளின் விமானக் குண்டுவீச்சு தொடர்ந்த வண்ணமிருந்தது. நாவற்குளிப் பகுதியின் நடந்த குண்டு வீச்சில் ஒரு வயோதிபப்பெண்மணி உட்பட இருவர் பலி. மட்டக்களப்பு பகுதியில் தொடர்ந்தும் அரசு புலிகளைத் தேடி தேடுதல் வேட்டை. திருகோணமலைப் பகுதியில் நடைபெற்ற தாக்குதலின்போது இரு புலிகளின் உடல்களை அரச படையினர் கைப்பற்றியுள்ளனர்.

# பண்டைத்தரிப்பை நோக்கி ஷெல் தாக்குதல்

27-8-92 வியாழக்கிழமை.

தொடர்ந்தும் பலாலியைச் சுற்றியுள்ள பகுதிகளில் கடும் சண்டை. புலிகள், இராணுவ தரப்பில் பலத்த சேதம். மாதகல் பகுதியில் அமைந்துள்ள இலங்கை அரசின் காவலரண் மீது புலிகள் தாக்குதல். இத்தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் பலி. இத்தாக்குதலைத் தொடர்ந்து சித்தங்கேணி, பண்டத்தரிப்பு பகுதிகளை நோக்கி பலத்த ஷெல் தாக்குதல். இதில் பல பெதுமக்கள் காயமடைந்துள்ளனர்.

இலங்கைக்குத் அகதிகளைத் திருப்பியனுப்புவதை நிறுத்துமாறுசென்னை உயர் நீதிமன்றம் தடையுத்தரவை விதித்துள்ளது.

# புலிகளின் தாக்குதல் உக்கிரம்

28-8-92 வெள்ளிக்கிழமை

வெற்றிலைக்கேணியில் அமைந்திருந்த பல காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் ஒரேநேரத்தில் தாக்குதல் நடாத்தியுள்ளனர். ஐந்து ராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். பலர் படுகாயமடைந்துள்ளனர். இத்தாக்குதலின் போது நான்கு விடுதலைப் புலி உறுப்பினர் பலியாகியுள்ளனர்.

பெரும்பான்மை ஜனநாயகத்தினால் இனப்பிரச்சனை தீரப்போவதில்லை எனவும் இனப்பிரச்சனைக்கு அமைதியான முறையில் தீர்வு காணாவிடின் பாரிய அழிவு ஏற்படும் எனவும் அரசியலமைப்பில் தகுந்த மாற்றம், சர்வஜன வாக்கெடுப்பின் மூலம்

# புகையிரதம் மீது கல்வீச்சு

கொழும்பு கோட்டையிலிருந்து வவுனியாவை நோக்கிச் சென்று கொண்டிருந்த புகையிரத்தின் மீது கடும் கல்வீ ச்சுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. 27 ஆம் திகதி (இம்மாதம்) தினரத்கம என்ற புகையிர நிலையத்தில் தரித்து நின்ற சமயம் அங்கே குழுமிய காடையர்களினாலேயே இவ்வாறு கல்லெறிச் சம்பவம் மேற்கொள்ளப்பட்டது.

இந்தச் சம்பவத்தின் போது அந்த ரயிலில் பயணம் செய்த தமிழ் பயணிகள் இருவர் படுகாயம் அடைந்துள்ளனர்.

# எண்ணை டாங்கி கடத்தல் விடுதலைப்புலிகள் பலி

இம்மாதம் 27 ஆம் திகதி அன்று திருமலை மாவட்டத்தில் உள்ள கும்பிருப்பிட்டி என்ற இடத்தில் வைத்து விமானப் படையினருக்கு என எடுத்துச் செல்லப்பட்ட எண்ணை ராங்கிகள் இரண்டைப் புலிகள் கடத்திச் செல்கையில் விமானப்படைகளினால் வழி மறிக்கப்பட்டிள்ளனர்.

இவ்விதம் வழி மறிக்கப்பட்ட வாகனங்கள் இரண்டின் மீதும் படையினர் தாக்குதல் நடத்தியமையினால் அதனை ஓட்டிச் சென்ற புலிகள் உட்பட அனைத்துப் பேரும் கொல்லப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது. ராங்கிகள் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

# இலங்கை அகதிகளை அனுப்பாதே! சென்னை நீதிமன்றத் தீர்ப்பு

இம்மாதம் 27 ஆம் திகதி வியாழக் கிழமை அன்று வழங்கப்பட்ட தீர்ப்பில் இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவதை நிறுத்தி வைக்குமாறு சென்னை உயர் நீதிமன்றம் ஒன்று தீர்ப்பு வழங்கியுள்ளது.

இலங்கை அகதிகளைத் திருப்பி அனுப்ப ஜெயலலிதா அரசு ஆரம்பித்த வேளையில் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கின் தீர்ப்பே நீதி மன்றத்தினால் வழங்கப்பட்டது.

இலங்கையிலிருந்து தமிழ்நாட்டிற்குச் சென்றுள்ள அகதிகளை திருப்பி அனுப்புவது அவர்களின் உயிர்களுக்குப் பங்கம் விளைவிக்கும் என்று கூறும் இத்தீர்ப்பு இப்படிப்பட்ட செயல்களை உடனடியாக நிறுத்தி வைக்கவேண்டும் என்றும் சம்பந்தப்பட்ட இலாகாவினைக் கேட்டுள்ளது.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பினால் ஏமாற்றம் அடைந்த ஜெயலலிதா அரசு இத்தீர்ப்பிற்கு எதிராக மேன் முறையீடு செய்துள்ளது.

இந்த உத்தரவை அடுத்து அகதிகளை ஏற்றி வரும் விமானங்கள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளதாக இலங்கைப் புனர் வாழ்வு அமைச்சின் செயலாளர் கிறிஸ்ரி சில்வா தெரிவித்துள்ளார்.

# ராஜீவின் கொலை வழக்கில் தமிழில் குற்றப் பத்திரிக்கை

தமிழீழ விடுதலைப் புலிகளினால் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று கருதப் படும் முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பான வழக்கு விசாரணையில் சாட்சிகளை விசாரிக்கும் பகுதி ஆரம்பமானதை அடுத்து குற்றம் சாட்டப்பட்டிருக்கும் தமிழ் சந்தேக நபர்களுக்கு குற்றப் பத்திரிகை தமிழில் வழங்கப்பட்டுள்ளது.

ராஜீவ் காந்தி தேர்தல் பிரச்சாரம் செய்ய சென்னை வந்திருந்த சமயம் குண்டு வைத்து கொல்லப்பட்டது யாவரும் அறிந்ததே. இலங்கையில் இந்திய படையினர் அட்டகாசம் செய்வதற்குப் பாத்திரவாளியாக இருந்த முக்கியமானவர்களின் ராஜீவ் காந்தியும் ஒருவராவார்.

சாட்சிகளை விசாரிக்கும் போது அவர்களது பெயர் விபரங்களை அழைக்காது தனிப்பட்ட இலக்கங்களை வழங்கி அந்த இலக்கத்தின் படியே சாட்சிகள் நீதிமன்றுக்குள் அழைக்கப்படுவார்கள் என்று கூறப்படுகின்றது.

# புலிகள் ஊடுருவலாம் இந்தியா அச்சம்

இந்தியாவில் இப்போது நிலைமை சாதகமாக இருப்பதனால் புலிகள் இந்தியாவுக்குள் புகுந்துள்ளதாக இந்திய உள்துறை அமைச்சர் சவான் தெரிவித்துள்ளார்.

கோவாவிலும் கர்நாடகத்திலும் புலிகள் நிலங்களை விலைக்கு வாங்கி வருகின்றார்கள் என்றும் காலப் போக்கில் இந்நிலங்களை தமக்குத் தளமாகப் பாவிக்க முயற்சி செய்வார்கள் என்றும் இவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இது பற்றி புலிகள் தரப்பில் எதுவித கருத்தும் தெரியப்படுத்தவில்லை.

முல்லைத்தீவில் 12ம் பக்கத் தொடர்ச்சி

யானது யாவரும் அறிந்ததே. இவ்வாறு மரண தண்டனையை பெற்றுக்கொண்டவர்களில் சிற்றூரவைத் தலைவர்களும் அடங்குவர். இதில் நால்வர் பெண்களை என்று கூறப்படுகிறது. இராணுவத்திற்கு காட்டிக் கொடுத்தார்கள் என்ற பேரில் நால்வருக்கும் மிகுதி அறுவரும் சிற்றூரவை விதிகளை மீறினார்கள் என்ற பெயரிலும் தண்டிக்கப்பட்டுள்ளார்கள் என்று தெரிய வந்துள்ளது.

இவர்களில் ஒருவர் ஓமந்தையைச் சேர்ந்தவர் என்றும் அவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்ட சமயம் ஊர் மக்கள் யாவரும் அழைக்கப்பட்டார்கள் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. சந்தியில் இருக்கும் மரம் ஒன்றில் கை கால் கட்டப்பட்ட நிலையில் வைத்து துப்பாக்கியனால் சுடப்பட்ட இவர் பின்னர் புலிகளினால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளார் என்றும் மேற்படி தகவல்கள் கூறுகின்றன.

ஏனையோர்... அவரவரது கிராமங்களில் இவ்வண்ணமே கொல்லப்பட்டார்கள் என்றும் இது போன்ற மரண தண்டனைகள் வெளியே வராது புலிகளினால் மறைத்து வைக்கப்படுகின்றன என்றும் பலருக்கு வரும் கடிதங்கள் தெரிவிக்கின்றன.

51 தமிழ் அகதிகள் 1ம் பக்கத் தொடர்ச்சி

வந்துள்ளது.

இச் செய்தி அச்சிற்குப் போகும் வரையில் இவர்கள் பற்றிய தகவல்கள் எதுவும் வெளியிடவில்லை. பெண்களின் நலை என்ன என்பதும் இதுவரை அறியப்படவில்லை. அடைத்து வைக்கப்பட்டிருக்கும் 51 தமிழர்களதும் பிரச்சனையில் லண்டன் அகதிகள் ஸ்தாபனங்கள் உடனடி அக்கறை செலுத்தி அவர்களை விடுவிக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கு மாறு ஈழ பூமி தயவாகக் கேட்டுக் கொள்கின்றது.

# சமஷ்டி முறையே உகந்தது.

புசன்ட லைன் ஆசிரியர்

(கொழும்பு)

இலங்கையில் இன்று நிலவி வரும் இனப் பிரச்சனைக்கு சமஸ்டி முறையிலான ஒரு தீர்வே பொருத்தமானது என்று புறண்ட் லைன் சஞ்சிகையின் ஆசிரியர் தெரிவித்துள்ளார். கடந்த மாதம் 31 ஆம் திகதி அன்று பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நடந்த அமிர்தலிங்கத்தின் ஞாபகார்த்த தினத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய திரு ராம் மேற்படி தெரிவித்தார்.

இவர் மேலும் பேசுகையில், தமிழ் மக்கள் தமிழீழம் கோருவதோ சிங்கள மக்கள் சிங்களம் மட்டும் என்று கூறுவதோ இனப்பிரச்சனைக்குத் தீர்வாக மாட்டாது என்று குறிப்பிட்டார்.

Your Occasions On Video
Wedding Ceremony, Birthay Parties
And All Other Special Occasions
Be Filmed On Video ??
GR TELEMOVE
Paris ************* London
Special Features:-
* Filters & Lenses
* Quality Audio Dubbing
* Multi Camera Recording
* Video Vision Mixing
* Special Effects
THE GUILD OF PROFESSIONAL VIDEOGRAPHERS
PROFESSIONALISM AND CREATIVITY
GR TELEMOVIE
The Name For Quality
London: Shan & Brothers ✆ 081-767 1899

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிதறல்கள்



பூங்கோதை

பவளமல்லிகை மரத்திலிருந்து பூக்களின் வாசனை பரவிக் கொண்டிருந்தது. வானத்து விண்மீன்களும் மரத்திலிருந்த மல்லிகையைப்போல சிதறிக்கிடந்தன. தண்ணிரை உள்ளெடுத்து, எந்த விதமான எதிர்ப்புமின்றி இம் மரத்தினால் இவ்வளவு பூக்களை எப்படி, எதற்காகத் தரமுடிந்தது என்ற குருட்டுயோசனையில் ஆழ்ந்திருந்தாள் ஆனந்தி.

தண்ணிரைத் தொடர்ந்து ஊற்றினாலும் விட்டாலும் அது மலர்களின் சுகந்தத்தைத் தரத் தவறியதில்லை. மலர்கள் கூட சிலநேரங்களில் பக்கத்திலிருந்த கோயிலிற்கும், சில நேரங்களில் பறிக்கப்படாமலும் இருப்பதுண்டு. ...ன்னுடைய பயனை மனிதர்கள் ...ன்படுத்திக் கொள்கிறார்களா ...லையா என்று அந்த மரம் ...லைப்படுவதில்லையே. இதே ... மனிதர்களிலும் சிலர் ...கிறார்கள் என்ற எண்ண... திடீரென்று அவளுக்கு ...டைய தகப்பனாரின் நினை...ந்தது. ஒருவேளை அவரும் ...ல்லிகை மரத்தைப்போல ...டைய சந்தோசத்தில் சந்தோச நினைத்திருக்கக்கூடும்.

...னந்தியின் தகப்பனார் சதா... அவ்வூரின் உயர்நிலை ...ளியின் தலைமை ஆசிரி...கக் கடமையாற்றி ஒய்வு ...ற்றவர். தான் இருந்த கால...வரை இயலுமானவரை ஏழைமா...ணவர்களின் கல்விக்கு ஊக்கம் கொடுப்பதும், ஊரின் தேவைகளுக்கேற்ப சிறிய சேவைகளைச் செய்தும் மக்கள்மனதில் நீங்கா இடம்பெற்றிருந்தவர். ஆனால் இந்த நல்லபெயரைச் சம்பாதிக்க முடிந்த அளவிற்கு பணத்தை சேர்க்க அவரால் முடிய வில்லை. அதற்காக அவர்கள் வீட்டில் என்றைக்குமே பிரச்சனை எழுந்ததில்லை. கணவனின் குணமறிந்து, குடும்பத்தை திறம்பட நிர்வாகித்த ஆனந்தியின் தாய் கனகம் குடும்பத்தில் ஏற்பட்ட அத்தனை பிரச்சனைக்கும் இலகுவாகத் தீர்வு கண்டு வந்திருக்கிறாள். சிறிய குடும்பம் ஒரே மகள் நாட்டுப் பிரச்சனையைத் தவிர வேறு எதுவும் அவர்களை பாதிக்கவில்லை.

அளவிற்கதிகமான புத்தகங்கள், பழையகாலத்து புராண இதிகாசங்கள் அத்தனையும் கற்றறிந்திருந்த சதாசிவம் நடைமுறை வாழ்க்கையில் ஏற்றத்தாழ்வு ...களையும் ஆனந்திக்கு சிறுவயது ...தலே சொல்லிக்கொடுத்திருந்தார். சிறந்த நன்பகை இருந்து அவளுக்கு வழிகாட்டியதாலோ என்னவோ ஆனந்தியும் தகப்பனின் குணங்களை முற்று முழுதாகக் கொண்டிருந்தாள். அதிதமான கற்பனையில் வாழ இடம்கொடுக்காமல் மனதை இயல்பான சாதாரண வாழ்க்கையை ஏற்றுக்கொள்ள பழக்கப்படுத்திக் கொண்டாள். சதாசிவத்தின் மாரடைப்பினால் ஏற்பட்ட திடீர் மரணத்தைத் தொடர்ந்து வந்த இந்த நான்கு ஆண்டுகளில் அவர்களது வாழ்க்கையில் இழப்பின் துன்பம் பயமுறுத்தினாலும் கூட வேறு எந்த மாற்றமும் நிகழவில்லை.

மாவின் குரல் எண்ணங்களுக்குத் தற்காலிக முற்றுப்புள்ளி வைக்க வீட்டினுள் திரும்பிப் பார்க்கிறாள். நேரம் எட்டரையாய்ப் போச்சு. ஊருக்குள்ள விளக்கெரிக்கப் பயந்து சனம் எல்லாம் நித்திரை. அரைவாசி தப்பியிருக்கிற இந்த ஊரும் எத்தனை நாளைக் கெண்டு தெரியேல்ல. நீ உள்ளுக்கு வந்து, சாப்பிட்டுவிட்டாத்தானே நானும் விளக்கை நூக்கலாம். தாயின் கவலை அவளை சாப்பிட அழைத்தது.

அதிகம் உயிர்சேதம், பொருட்சேதம் இன்றி ஒன்றிரண்டு வீடுகளும், நான்கைந்து பேர்களையும்மட்டுமே இழந்து ஒரளவு முழுமையாக எஞ்சியிருந்தது அவர்களது கிராமம். கடவுளின் கிருபையோ அன்றி இராணுவமுகாம்களில் இருந்து மிகத் தொலைவில் அமைந்து, ஆகாயத் தாக்குதலைத் தவிர வேறு எதுவும் பாதிக்கமுடியாமல் இருந்ததோ தான் காரணம். ஆனால் மிகக் குறுகிய தொலைவில் ஏராளமான அழிவுகள் நடந்திருந்தது.

ஆனந்திக்கு சிந்தனை பலமாக இருந்தது. தான் நினைப்பதை அம்மாவிடம் சொல்லி விடலாமா, வேண்டாமா என்று குழப்பமாக இருந்தது. காலையிலிருந்து இதுவரை பெரிதாக எதுவும் குழப்பவில்லை. ஆனால் தாயின் முகத்தைப் பார்த்தவுடன் நேற்று நடந்த சம்பவத்தை சொல்ல வேண்டும் போன்ற துடிப்பு அவளிடம் எழுந்தது. எந்த சிறு சம்பவத்தையும் தாயிடமிருந்து மறைத்ததில்லை அவள். ஆனாலும் எதிலும் அவசரமில்லாத அவள் மனம் அவளை ஏனோதடுத்தது. கண்முன்னே சுரேஸின் முகம் மின்னி மறைந்தது. அதே வேளை ஆனந்தி... என்று தொடங்கி எதையோ சொல்லத் தொடங்கினாள் கனகம்.

இண்டைக்கு பின்னேரம் மாமி வந்திட்டுப்போனவ. அண்ணர்




இருந்திருந்தால் ஆனந்தியை இந்நேரம் கரை சேர்த்திருப்பார் என்று சொல்லுறா. ஊருக்குள்ளையிம் ஆமி நடமாட்டமாய்க் கிடக்கு. எல்லாம் காலம் தாழ்த்திறது நல்லதில்லை என்று பேசிப்போட்டு போறா.

பாதி சிரிப்புமாய் வருகிறது. இப்போது ஆமியைப் பற்றிக் கவலைப்படுகிறாவா, இல்லை மாமியைப் பற்றிக் கவலைப் படுகிறவா என்று கேட்க நினைத்து பின்பு உண்மையான கவலை ரேகைகளை தாயின் முகத்தில் கண்டு மௌனமாகிறாள். என்ன விசயம் அம்மா? மாமிக்கு சும்மா ஏதாவது என்னைப்பற்றி கிளறாட்டி விடியாது. நீங்கள் கவலைப் படாதையுங்கோ என்று சொல்லி விட்டு சாப்பிட அமருகிறாள்.

கனகம் மகளுக்காக எடுத்து வைத்த சோற்றையும், தோட்டத்தில் கிண்டிய மரவள்ளியை கறியாக்கியும் வைத்திருந்தள். அவளுக்குத் தெரியும் தன்னுடைய கைகளினால் எதைச் சமைத்தாலும் சலிக்காது சப்பிடும் மகள் ஆனந்தி என்று. அதனால்தானே கணவனை இழந்த நாள்முதலாய் இன்று வரை அன்னியர் அயலவரிடம் கடனாக எதையும் பெறாமல் தன்மானத்துடன் வாழமுடிகிறது. சாப்பாடு என்றல்ல உடையோ எதுவோ தாயின் விருப்பம்தான் மகளின் விருப்பம். உற்றார் உறவினர் வாயில் அகப்பட்டு எழும்பாமல் தாமுண்டு தம் வேலையுண்டுஎன்று இதுவரை காலமும் வாழ்ந்துவிட்டார்கள். ஒரு வேளை தர்மம் தலைகாக்கும், என்பார்களே. அதுதான் தகப்பனின் தர்மங்களும். உதவிகளும் அவர்கள் குடும்பத்தை மறைத்து நின்று காக்கிறதோ என்னவோ.

மகளின் தேவையையும் குணத்தையும். வயதையுமறிந்து நல்ல விதமாக வளர்த்து விட்டாலும், இன்று ஆனந்தியின் மாமியின்-கணவனின் தங்கை- வருகை அவளை யோசிக்க வைக்கிறது. எதையோ தான் செய்யத்தவறி விட்டதை உணர்த்திவிட்டுப் போனது போன்ற எண்ணமே அவளைக் கொல்கிறது. மற்றவர் சொல்லித்தான் தன் கடமையை ஒரு தாய் உணர வேண்டுமா. என்ற நினைவினூடே ஆனந்திக்கு இப்போது இருந்திருந்து எண்ணினாலும் இருபது, இருபத்தியொண்டு தானே ஆகிறது என்று திரையொன்று விழுகிறது. இருந்தாலும் எதையும் ஆறப்போடாமல் கதையோடு கதையாக கேட்டால்தான் மனம் ஆறும்என்று விளங்க மீண்டும் பேச்சைத் தொடங்குகிறாள்.

"ஆனந்தி... ஆறுதலாய்ச் சாப்பிடு. அவசரமில்லை... இன்னும் கொஞ்சம் சோறு போடுறன். வேண்டாம் அம்மா இது நல்லாய் போதும்!. இல்லை ஆனந்தி. நீ என்ன வீட்டில பேசாமல் இருக்கிறனியே. சங்கம் சங்கம் என்று ஒரு நாளில் முக்கால் வாசி நேரம் அங்க. கால் வாசி நேரம் தானே வீட்டு ஞாபகம். உடம்பு என்னத்துக்காகும்?

அன்போடு மீண்டும் பரிமாறிய சோற்றைத் தட்ட மனமின்றி சாப்பிடுகிறாள் ஆனந்தி.

10ம் பக்கத் தொடர்ச்சி

## வடக்கும் தெற்கும்

அன்றிரவு பத்து மணியிருக்கும். கொவுரி கொச்சைத் தமிழில் அவளது பெயர் அழைக்கப்பட்ட போதே அவளுக்குத் தெரியும் ஏதோ விவகாரம் பெரிதாக இருக்கும் என்று. தனக்கு ஒய்வு பெறும் காலம் வந்து விட்டது என்பதை உணர்த்தும் ஆடை. அழுக்குடன் அலங்கோலமாகத் தோன்றும் கூந்தல். எத்தனை எலும்புகள் இருக்கின்றனவோ அத்தனை எலும்புகளையும் எண்ணிவிடக்கூடிய தேகம். அவள் நடுக்கத்துடன் எழுந்து நின்றபோது அந்த சிங்களக் காடை இராணுவம் தங்கள் பாசையில் சல்லாபித்துச் சிரித்துக் கொண்டது.

உயர் அதிகாரி உன்னை விசாரிக்க வேண்டுமாம் வா....அந்த கூட்டத்தில் இருந்த ஆமிக்காரன் ஒருவன் கர்ச்சித்த போது அமைதியாக பின்தொடர்ந்தாள். மஸ்கட நெருங்கியபோது அவளுக்கு இதயம் இரட்டிப்பு வேகத்தில் அடித்தது. அவளை உள்ளே அனுப்பி விட்டு இராணுவத்தினர் தமது கண்காணிப்புப் பகுதிகளுக்குப் புறப்பட்டனர்.

இல்லை ஐயா................

இல்லை ஐயா..............

கௌரியின் ஒலம் கேட்டு ராசம்மா கண்களை துடைத்துக் கொண்டாள்.

அங்கே ஒரு பெரிய பிரளயமே நடப்பது அங்கு தடுத்து வைத்திருந்தவர்களுக்குப் புரிந்தது.

ஆ..................என்ரை ஐயோ...............அவள் கத்தினாள்

(தொடரும்)

ஒரு வாசகரின் வேண்டுகோள்

## வீடியோப் படங்களுக்குள் விளம்பரப் பொட்டலங்கள்

தா. இரத்தினசிங்கம் (யூட்)

மூன்றாம் உலகநாடுகளிலே வாழுகின்ற மக்கள் காலத்துக்குக்காலம் ஏமாற்றப்பட்டு, அடிமைப்படுத்தப்பட்டு வருவதும் அதனால் மக்கள் அனுபவித்த துன்பங்களும், வேதனைகளும் நாம் அறிவோம். இந்த ஏமாற்றுகின்ற தன்மைகள் மேற்குலக நாடுகளுக்கு வந்து விட்ட பிண்பும் தொடர்கின்றன என்பதற்கு வீடியோப்படங்களே வெளிப்படையான உதாரணங்கள்.

முன்பெல்லாம் மக்கள் திரையிலே கடு களித்த சினிமாப்படங்களை இப்போ வீடியோ கசட்டுக்களின் மூலம் தொலைக்காட்சியிலே கண்டுகளிக்கிறார்கள். விருப்புடன் அல்ல வசதியின்மையால். இதை தமக்கு சாதகமாகப்பாவித்து பலர் தமது விளம்பரப் பொட்டலங்களை வீடியோப்படங்களின் இடையிடையே போட்டுவந்தனர். இது படிப்படியாக வளர்ந்து இப்போ திரையையே மறைக்கின்ற அளவிற்கு ஆரம்பத்தில்இருந்து முடியு ம்வரை திரையின் நடுவிலே புகுத்தி அவர்களின் ஆசையை பூர்த்தி செய்கின்றார்கள்.

மக்கள் பணத்தைக்கொடுத்து படத்தை எடுப்பது தமது பொழுது போக்கிற்கே தவிர விளம்பரக்காரர்களின் திருப்திக்காக அல்ல என்பதை வீடியோப்படங்களை வாடகைக்குக் கொடுப்பவர்கள் மிகவும் கவனத்திற்கு கொண்டுவரவேண்டுமென்பது மிகவும் கட்டாயமானது.

விளம்பரக்காரர்களுக்கு ஒரு வேண்டுகோள் உங்களுடைய விளம்பரங்கள் விளம்பரங்களாக இல்லாது மக்கள் மத்தியில் வெறுப்பைத்தான் ஏற்படுத்துகிறது. தரத்தை உயர்த்தி விலையைக் கூட்டுவார்கள் மேற்குலக நாடுகள், தரத்தைக்குறைத்து விலையைக்கூட்டுவார்கள்மூன்றாம் உலக நாடுகள், இதைத்தான் மேற்குலக நாடுகளுக்கு வந்துள்ள மூன்றாம் உலக நாட்டுமக்கள் தொடர்கிறார்கள். இதை மாற்றி மக்களை மக்களாக மதியுங்கள்.

உங்கள் வீட்டில் நடைபெறும் சகல
மங்களகரமான வைபவங்களுக்குத் தேவையான
பூ மாலை, சரம் இன்னும் சகலவிதமான
பூ வேலைகட்டும்
தொடர்பு கொள்ளுங்கள்
விஜயா
313 Haydons Road
London SW19
☎ 081 543 2943

# ஒரு பேனாவின் பெருமூச்சு

முல்லையூர்
கே. பாஸ்கரன்

இன்றைய திகதிகள்
கடந்துபோன காகிதக் கனவுகளை
மீண்டும் மீண்டும்
கண்ணுக்குள் இழுத்துவரச்
சொல்கிறது!

மலைகளைத் தகர்த்து
தென்றலை புயலாக வீசச்செய்து
சமுத்திர மனசு
அலைகளை ஆயுதங்களாக்கிக்கொள்கிறது!
மறுபடியும்!

பாதாளத்தில் வீழ்வதற்காக
நமது பாமரர் தேசம்
பராமரிக்கப்படவில்லை
பதிலாய் —

பகைவனை
பேரு முனையில் அறைகூவல் செய்து
போருக்கு ஆரம்பமாகிறோம்
மீண்டும்!

இனப்பசி எழுந்தவர்க்கு
இன்று
இளைய இதயங்கள்
உருவி எடுக்கப்பட்டு-நெருப்பிலே
வற்றல் போடப்படுகிறது!

தெற்கிலே தாகமெடுத்தால்
வடகிழக்கு வாய்க்காலில்
வருகிறது மனித குருதியாக!

அவ் வாய்க்காலை வழிமறிப்புச்செய்து
புதிய புதிய புயல்களை
விதைப்போம் புரட்சியாக
பூக்கும் ஒரு இனிய தென்றல்
உறுதியாக!

# உயிரை விலைபேசேன்

பாவம் அறியாத பன்னிரண்டு
வயதில்
பருவமடைந்து விட்டேன்.
நடந்தேதோ அவையெல்லாம்
எம் நடைமுறைக்கு
முரணானது தான்.

நாவுக்கினிய நல்வார்த்தை
சொன்னதினால்
நாணத்தினை இழந்துவிட்டேன்
வாழ்க்கையைப் புரியத்
தவறியதால்
வயது என்னை
ஜெயித்துவிட்டது.

கருவறையிலே இன்னொரு
சிசுவுக்கு இடம்
கொடுத்தேன்.
கருவமைப்பு எப்படி என்று
கடவுளே பதிலளிப்பான்.

கருவைப் படைத்திட
மாத்திரை படைத்தவனே
காதலைக் கணக்கிட
அதையேன் படைக்கவில்லலை?

கண்ணீர் துளியைத் துடைக்கும்
தாயே! கவலையை எப்படித் துடைப்பது?

வாலிபத்தினை வெறுக்கின்றேன்
வயிற்றிலே சாட்சி சுமக்கின்றேன்.
அதனைப் புரிந்திட
நாலுபேரின் நடுவே
நல்லவன் ஒருவன் உதிப்பான்.
இனிவாழத் தயங்கமாட்டேன்
சமுதாயம் இருக்கும் வரை
சலித்திடவும் மாட்டேன்.

நின்மதியாய் வாழாவிட்டாலும்
நீதி கேட்டு நீதி மன்றம் செல்வேன்
ஊரே என்னைக் கேலி
செய்தாலும்

என் உயிரை மட்டும் விலை பேசேன்.
ஏனெனில் ........
மேற்கில் வழுக்கி விழுந்த
சூரியன்
கிழக்கில் மீண்டும் வருவதால்
....அகில்

## சிறுவர் பகுதி

# ஒரு ஜீவனின் அழுத்தமான நெருடல்

கே. வி. சிதம்பரநாதன்

' ராஜு ' ராஜு''

எங்கேயடி இந்த நாயைக்காணோம்.

ராஜுவையோ தேடுறாய் அது வந்தால்தானே அவருக்கண்ணை இப்ப வெளியில்தான் வேலை. என்றவாறு தங்கை ஓடி வந்தாள்.

கடைசித்தங்கை கலா சொன்னாள்.

நேற்றண்ணை வளவுக்குள்ளை மாடு வந்திட்டுது ராஜுவைக்கூப்பிட்டு களைச்சது தான் மிச்சம்.

வரட்டும் எப்படியும் வருவார்தானே பார்ப்பம். என்றவாறு சாப்பாட்டுமீதியை கழிவு தட்டில் வைத்து விட்டு அடுப்படியை விட்டு வெளிக்கிடும் போது கலா வந்தாள்.

அங்கை பாரண்ணை ராஜு வாறார்.

வாறாரோ இண்டைக்கு உதை கட்டிப்போட்டு நல்ல செமை போட்டால் தான் திருந்துவார். புடியுங் கோடி நாயை.

ராஜு ராஜு என்று கத்தியதும் உடனேஓடிவந்தது நாய். கலா அதன் கழுத்தைப்பிடிக்க தயாராய் வைத்திருந்த கயிற்றினால் கட்டி கொய்யாமரத்துடன் பிணைத்து விட்டேன்.

எடடி அந்த பூவரசந்தடியை

ஓடிக்கொணர்ந்து தந்து விட்டு இரு கைகளையும் இடுப்புக்குக் கொடுத்துவிட்டு நின்றாள்.

தனக்கு ஏதோ நடக்கப்போகின்றது என்ற பாவனையில் ராஜு என்னை பரிதாபமாகப் பார்த்தது.

வீட்டிலை நிற்காமல் வெளியில உலாத்த உனக்கு என்று சொல்லிக்கொண்டு பூவரசம் கம்பு கிழியும் வரை வெறிதீருமட்டும் அடித்தேன்.

வள் வள் என்று கத்திக்கொண்டு அந்த வேதனையில் முணகி முணகி ஓலமிட்டது ராஜு.

கலா, சுகி ஒருத்தரும் உவருக்கு சாப்பாடு போடக்கூடாது. பட்டினி கிடந்தால் தான் புத்தி வரும். என்று சொல்லி விட்டு வீட்டை விட்டு வெளிக்கிட்டு விட்டடேன்.

ஊர் சுற்றி விட்டு திரும்பி வரும் போதுதான் கலா சொன்னாள்.

அண்ணை பாவமண்ணை ராஜுவை அவிட்டு விடுவம்.

வாலைச்சுருட்டி வளைந்து கூனிக்குறுகிப் படுத்திருந்த நாயைப்பார்த்ததும் எனக்குப் பரிதாபமாகத்தான் கிடந்தது.

கொய்யாமரத்தில் இருந்து ராஜுவுக்குக் விடுதலை கிடைத்ததும் அடியின் வேதனையில் இருந்து ஆறுவதற்காகவோ என்னவோ வீட்டு முற்றத்து பூவரச மரத்தின் கீழ் போய் படுத்து விட்டது.

இருட்டிவிட்டது எல்லோரும் படுக்கைக்கு போய் விட்டோம்.அசதியில் எல்லோரும் கண்ணயரும் நேரம்

கோழிக்கூட்டில் ஏதோ சத்தம் அதைத்தொடர்ந்து ராஜுவின் குரையல் சத்தமும் சேர்ந்து என்னை விழிப்படையச் செய்துவிட்டது. சற்றுநேரத்திற்கெல்லாம் ராஜு நாலைந்து பேருடன் போராடும் சத்தமும் மனிதர்கள் ஓடிப்போகின்ற சத்தமும் தான் கேட்டுக் கொண்டிருந்தது.

இதற்கிடையில் கலாவும் சுகியும் என்னடிக்கு ஓடி வந்தார்கள்.

அண்ணை கோழிபிடிக்க யாரோ வந்திருக்கினம். நான் போய் பார்க்கட்டோ நீ போகாதை அண்ணை இரவு முழுக்க ராஜு குரைத்துக்கொண்டேயிருந்தது. எல்லோரும் உறங்கி முடிந்தது, விடிந்ததும் கோழிக்கூட்டைப்போய்ப்பார்த்தேன். கோழிகள் யாவும் பத்திரமாக இருந்தன.

எங்கே ராஜு

ராஜு ராஜு என்று கத்தினேன்.

ஓடி வந்த நாய் தூரநின்று என்னைப்பார்த்து பின்வாங்கி பின்வாங்கி தயங்கியது.

வாயெல்லாம் கிழிந்து ரத்தம் ஓடிக்கொண்டிருந்தது. உடம்பெல்லாம் கத்தியால் ககிழிக்கப்பட்ட காயம். முன்னங்கால் முடங்கியிருந்தது.

கலா....சுகி ஓடிவாங்கடி இஞ்சை பாருங்கடி ராஜுவை

**சிறுவர் பகுதிக்கு கதைகள், கட்டுரைகள், கவிதைகள் வாசகர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.**

அண்ணை ராஜுவை கள்ளங்கள் கத்தியாலை குத்திப்போட்டாங்கள், பாவமண்ணை ராஜு ,அண்ணை பாரண்ணை ஒரே ரத்தம்

புடியுங்கோடி நாயை மருந்து போடுவம்

ராஜு ராஜு என்று கத்தினேன்

ஓடி வந்த ராஜு தயங்கித் தயங்கி பின்வாங்கியது

திரும்பவும் கட்டிப்போட்டு அடிப்பாங்கள் என்று நினைத்திருக்கலாம். வரவே மறுத்தது. மாறாக ரத்தம் கொட்டிக்கொண்டே இருந்தது.

ராஜு அடிக்க மாட்டேன்ரா வாடா

அது பின்னுக்கே போய்க்கொண்டிருந்தது.

நீ இரண்டடியோட நிப்பாட்டியிருக்கலாம். இரு தங்கைகளும் ஒன்றாக சொன்னார்கள்.

ராஜு வரவேயில்லை மாறாக பூவரசின் கீழ் படுத்து விட்டது. சற்று நேரத்திற்கெல்லாம் அயர்ந்து தூங்கியது.

தூங்கியதும் ...மெதுவாகச்சென்று ராஜுவைக் கட்டிப்பிடித்தேன்.

ராஜு ராஜு எனிமேல் உன்னை அடிக்க மாட்டேன்ரா.

ராஜு ராஜு என்று கத்தினேன். கொண்டு வந்த மருந்தை அதன் காயங்களுக்குப் போட்டுத் தடவினேன்.

மெதுவாக நிமிர்ந்து பார்த்தது. அதன் கண்களினின்றும் கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது. அடிபட்டு முடங்கிப்போன முன்னங்கால்களால் என் தலையை தடவியது. ஆறுதலாக அதன் தலைதடவினேன்.

கலாவும் சுகியும் பால் சோறு எல்லாம் கொண்டு வந்து வைத்தார்கள்.

இருவரையும் நிமிர்ந்து பார்த்து விட்டு சாப்பிடத்

தொடர்ச்சி 11ம்பக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சென்ற இதழ் தொடர்ச்சி

# தமிழனும் தமிழ்க் கலாச்சாரமும்

## கோபமான ஒரு கடிதம்

பிரச்சனைகள் இருக்கிறது தீர்வு. இங்கிலாந்தில் படிப்பறிவில் முன்னோடி மாணவர்களாகத் திகள்வது ஆசியர்கள். குறிப்பாக இந்தியர்கள் என்பது புள்ளி விவரம். பலமொழி தெரிந்தவன் பல்வேறு உலகைத்தெரிந்தவன். தனது கடைசி நாட்களில் இந்திய நாகரிகத்தின் தொன்மையைப் புரிந்துகொள்ள சமஸ்கிருதத்தை படிக்க முயன்ற' கார்ல்மார்க்ஸ்' தனது தாய் மொழியான ஜேர்மன் தவிர வேறெதிலும் எழுதியவன் இல்லை. ஜேர்மனில் தான் அவன் சிந்தித்தான். அவன் உலக மனிதனாக இன்றும் நிற்கிறான்.

அடிமைச்சிந்தனைதான் இன்றும் தமிழனிடம் இருக்கிறது. கலாச்சார அடிமைத்தனம். அண்டிப் பிழைக்கும் குணம். போலியான குணம்.

இந்த மாதிரியான அடிமைச்சிந்தனை கூட ஈழப்பிரச்சனையில் ஒரு அடிப்படையான பிரச்சனைதான்.

தமிழ்க்கலாச்சாரப் பெருமை என்பது உலக மானுட விடுதலைச்சிந்தனைக்கு ஆற்றும் பங்களிப்பின் பெருமைதான்.பாரதிதான் தமிழ். தெருக்கூத்துத் தமிழ். ஜானகிராமன் தமிழ். மகாகவி தமிழ். சேரன் தமிழ். சீனிவாச ராமானுஜன் தமிழ். லண்டன் ஓவியர் ராஜா தமிழ். மாற்கு தமிழ். செழியன் தமிழ். சரிநகர் தமிழ். ஏழாவது மனிதன் எனும் சினிமா தமிழ். கம்பன் தமிழ். இளங்கோ தமிழ். பரதம் தமிழ். நாதஸ்வரம் தமிழ். மிருதங்கம் தமிழ். அவைக்காற்றுக் கழகம் தமிழ். சிவரமணி தமிழ். பல்கலைக்கழக ஆசிரியர்களின் மனித உரிமை அறிக்கை தமிழ் மனசாட்சி.

இதை எல்லாம் விட்டுவிட்டு எந்த லண்டன் பெற்றோல் சைட் மூலையில் வாழ்கிறது தமிழ்க் கலாச்சாரம்?

சிங்களமொழி காட்டு மிராண்டி மொழி இல்லை. இந்தி மொழியிலும் ஸத்யஜித்ரே ஸியாம் பெனிகன் போன்ற மேதைகளின் சினிமாக்கள் உண்டு. சிங்கள மொழியில் வருடம் மூன்று படங்களே வெளியானாலும் மூன்றும் சர்வதேச விருதுகள் பெறுகிறது. சிங்கள மொழிக்கும் அழகும் வரலாறும் மனிதாபிமான உள்பக்கமும் உண்டு. இதை உணர்ந்ததும் தமிழ்க் கலாச்சாரம் தான்.

பல்வேறு வியாபாரங்களில் கோயில் திண்ணை வியாபாரங்களில் பணத்தை முடக்கும் ஐரோப்பியத் தமிழனால் ஏன் ஒரு சர்வதேசிய தரமுடைய படத்தைத் தர முடியவில்லை?

குழந்தைகளின் பிறந்தநாள் விழாக்களில் இங்கு மதுபான நடனம் நடக்கின்றது. நாட்டு மக்களின் துயர் குறித்த விசாரணைகளைக் கூட அங்கு நாம் கேட்க முடிவதில்லை.

அமெரிக்க ரம்போ படத்தை ரசிக்கும் மன நிலையில் தான் ஈழ விடுதலைப் போராட்டத்தை வீர தீர சாகச நாடகமாகத் தான் பார்த்துக் கொண்டிருக் கின்றார்கள்.

உலகெங்கும் நடக்கும் விடுதலைப் போர்களின் நடைமுறைகள் பற்றிய ஆய்வுகள் இல்லை. கிணற்றுத் தவளை மனப்பான்மையிலிருந்து உலகை நோக்குகி றார்கள். அனுபவங்கள் மீதான விசாரணை இல்லை.

மணியடிக்கும் கூட்டம் தான் பேரிரைச்சல் போடுகின்றது. நாம் மந்தைகளைப் போல் விலகி நின்று வேடிக்கை பார்க்கின்றோம். ஆங்கிலேய னோடு கெட்ட வார்த்தைகள் பேசுவதில் போட்டி இடுகிறான் தமிழன். ஒரு வேளை கலாச்சார பரிவர்த் தனை என்று இதைத்தான் கருதியிருக்கின்றான் போலும்? தமிழன் கலாச்சாரம் பற்றி வெற்றுக் கூச்சல் போட்டுக்கொண்டிருக்காமல் அதன் வேர்கள் குறித்து விசாரிக்கத் தொடங்க வேண்டும். தமிழர்களுக்கு விடுதலையின் தொடக்க நாள் அன்று தான்.

மகாகவி பாரதி தமிழன்

அவன் மொழி தமிழ்.

எமது தாய் மொழியும் தமிழ்.

முற்றும்.

* ரோசா *

## சுவிஸ் உட்பட டென்மார்க்கும் .

1ம் பக்கத் தொடர்ச்சி

அரசு உத்தரவாதம் அளித் தமை இங்கு குறிப்பிடத்த க்கது.

இது இவ்வாறிருக்க, பிந்திக் கிடைத்த தகவல்களின் பிரகாரம் ஏனைய தமிழ் அகதிகள் இன்னும் ஐந்து மாதங்களுக்குள் திருப்பி அனு ப்பப் படுவார்கள் என்று அரசு அறிவித்துள்ளது.

இதே போன்று டென் மார்க்கும் அங்கிருக்கும் இரண் டாயிரத்துக்கும் மேற்பட்ட அக திகளைத் திருப்பி அனுப்ப முடிவு செய்துள்ளதாக

இலங்கைக்கு அறிவித்துள்ளது.

இவர்கள் எப்போது திருப்பி அனுப்பப் படுவார்கள் என் பது அறிவிக்கப்படாத போதி லும் கெட்டியான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக அங்கிருந்து கொழும்புக்கு கிடைக்கும் தகவல்கள் தெரி விக்கின்றன.

இவர்களைத் திருப்பி அனு ப்ப வேண்டாம் என்று புள ட்டின் உத்தியோக பூர்வமான கட்சியான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி அவர் களை மனிதாபிமான முறை யில் கருத்தில் எடுத்து நிலமை வழமைக்குத் திரும்பும் வரை திருப்பி அனுப்ப வேண்டாம் என்று இலங்கையிலிருக்கும் டென்மார்க் தூதராலயத்தைக் கேட்டுள்ளது.

## போக்குவரத்து பாதைகள்

1ம் பக்கத் தொடர்ச்சி

கடலில் ஏற்பட்ட கொந்த ளிப்பினால் படகு கவிழ்ந் ததில் தண்ணீரில் விழுந்து இறந்துள்ளார். இவரது கைக்கு ழந்தையும் இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளது. சடலங்கள் இன்னமும் கண்டு பிடிக்கப்ப டவில்லை.

## ஜனாதிபதித் தேர்தல்

12ம் பக்கத் தொடர்ச்சி

க்கச் சார்பானது என்று குறிப்பிட்டுள்ளார். அத்தோடு தான் இந்தத் தீர்பை முற்றாக எதிர்ப்பதாகவும் குறிப்பிட்டுள் ளார்.

உயர் நீதிமன்றத்தில் தீர்ப்பு வெளியாகியதும் ரூபவாகினி நிகழ்ச்சிகள் இடைநிறுத்தப் பட்டு உடனே இத்தீர்ப்பு பற் றிய ஒளிபரப்பு மேற்கொள்ளப் பட்டது.

## பத்து லொறிகளுக்கே .

2ம் பக்கத் தொடர்ச்சி

இருந்து 133 தமிழ் அகதிகள் திருமலைக்கு இந்திய அதி காரிகள் சகிதம் அழைத்து வரப்பட்டுள்ளனர். திருமலை யில் இருக்கும் உப்பு வெளி என்னும் இடத்தில் இவர்கள் குடியேற்றப்படுவர் என்று கூறப்படுகின்றது. சென்னை நீதிமன்று ஒன்று அகதிகளை திருப்பி அனுப்ப வேண்டாம் என்று தீர்ப்பு வழங்கிய பின் னர் ஜெயலலிதா அரசினால் வலோற்காரமாக திருப்பி அனுப்பப்பட்டிருக்கும் முதலாவது தொகுதி அகதிகள் இவர்களாகும்.

## மரணப்பீதியில் இந்தியா

3ம் பக்கத் தொடர்ச்சி

முப்பதுகளைத் தாண்டாதவர்கள்.

இங்கே இருக்கும் விபச்சாரிகளில் பெரும்பான் மையானவர்களுக்கு எயிட்ஸ் பற்றி அபாயத்தினை நன்கு அறிந்திருக்கின்றார்கள்.

'எங்களுக்குத் தெரியும் நாம் ஆண்களுடன் உடலு றவு வைத்துக் கொள்வதன் மூலம் எயிட்ஸ் நோயைப் பெற்றுக் கொள்வோம் என்று. ஆகவே தான் நாம் ஆண்களை ஆண்உறை பாவிக்கும் படி வற்புறு த்துகின்றோம். கூடிய பணத்தைக் கொடுத்து யாராவது ஆண்உறை இல்லாமல் உறவு கொள்ள அணுகினால் அவர்களை நாம் விரட்டி விடுவதுண்டு' என்று கூறுகின்றார் இருபது வருடங்களாக இந்த தொழிலில் ஈடுபடும் கமலா என்கின்ற பெண் ' நான் என்னுடன் இருக்கும் மற்றப்பெண்களுக்கு கூறுவதுண்டு. எந்த நேரமும் ஆண்உறை பாவிக்கும் படி ஆண்களை வற்புறுத்துங்கள் என்று. பணத்துடன் மட்டும் சம் பந்தப்பட்டவர்களாக இல்லாமல் சுகாதார த்தையும் அவர்கள் கருத்தில் எடுக்க வேண்டும். யாராவது கூடிய பணம் தருகின்றேன் என்று கேட்டால் அவர்கள் பிரிதி இல்லாவிட்டால் மறுத்து விட வேண்டும்.'என்று கூறுகின்றார் கல்கத்தா என்ற இடத்திலிருந்து விபச்சாரம் செய்ய வந்திருக்கும் 22 வயது நிரம்பிய சந்தியா என்கின்ற பெண். இவர் இந்தத் தொழிலுக்கு வந்து நான்கு மாதங்களே ஆகின்றனவாம்.

டொக்டர் ஜிலடாவின் நிறுவனத்தின் மூலம் சில பகுதிகளில் ஆணுறை இலவசமாக வழங்கப்படுகி ன்றது. தெருத்தெருவாக செய்யப்படும் இந்த நடமாடும் கிளினிக் முறையின் மூலம் எயிட்ஸ் பற்றிய தெருக்காட்சிகளும் காணிப்பிக்கப்படுகின்றன.

இதே போன்று இயங்கும் சர்வதேச குடிமக்கள் சேவை ஸ்தாபனம் பெண்களை ஆணுறை பாவிக் கத் தூண்டும் வகையில் பிரச்சாரங்களை மேற்கொ ண்டு வருகின்றது.

ஒரு கைக்குழந்தையுடன் விபச்சாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் பாரதி என்கின்ற 22 வயது நிரம்பிய பெண் தான் சாவிற்கு அண்மையில் இருப் பது அவளுக்குத் தெரியாது. ஆணுறை பாவிக்க வேண்டும் என்பதில் உடன் படும் இவர் எயிட்ஸ் நோய்க்கு மருந்து கிடையாது என்பதையும் நன்கு அறி ந்து வைத்திருக்கின்றாள்.

எயிட்ஸ் பற்றிய முழு விடயங்களையும் அவள் அறிந்திருந்தாலும் கூடிய பணத்திற்காக அவள் ஆணுறை பாவிக்காமலே உடலுறவு கொள்ள அனு மதிக்கிறாள். "எனக்கு எயிட்ஸ் வருமானால் அது என்னுடைய கையில் இல்லை. அது ஆண்டவனின் கையிலேயே இருக்கின்றது" என்று கூறுகின்றாள்.

## லலித் தாக்கப்பட்டார்

(கொழும்பு )

முன்னாள் ஐக்கிய தேசியக் கட்சி அரசின் அமைச்சரும் புதிய ஜனநாயக் மக்கள் முன் னணித் தலைவர்களுள் ஒருவ ருமான லலித் அத்துலத் முதலி 29 ஆம் திகதி ஆவணி மாதம் பலத்த தாக்குதலுக்கு உள்ளா கியுள்ளார்.



மெய்ப்பாதுகாவலர்கள் சகிதம் தெகிவளையில் ஒரு கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்று கொண்டிருந்த லலித் குண்டர்களினால் கத்திகள் சகி தம் தாக்கப்பட்டார்.

இவருடன் சென்ற நான்கு மெய்ப்பாதுகாவலர்களும் கத்திக் குத்துக்கு இலக்கானா ர்கள். லலித் அத்துலத் முதலி காலில் காயத்துடன் உயிர் தப்பியுள்ளார்.

இது பற்றி பத்திரிகையா ளர்கள் லலித்திடம் கருத்துக் கேட்கையில் அவர் அப்படிப் பட்ட செயலுக்கு யார் சூத்திரதாரி என்பது தமக்குத் தெரியும் என்று கூறியுள்ளார்.

## Voiceless Voice Of Sri Lankans In Hungary.

Sri Lankans
Kerepestarcsa,Deportation Camp
Deak - Ferenc U.T-13
P.F-5, Budapest 2143 - Hungary
23rd August 1992.

Dear Sir/Madam

We are fifty one Sri Lankans, all are political asylum seekers writing to you for your sympathies support for our fasting struggle to free from the harassments and the jail in Budapest, Hungary.

Since more than three months we are kept under custody with lot of harassments and darkness. We all have decided to "Indefinite Hunger Strike" till offering our following demands. We are going to start our struggle on 7th of September 1992 early morning 6 O clock.

Our Demands:

1) Any situation must stop the deportation to Sri Lanka.
2) Positive or negative, must take any decision as quick as possible for our asylum cases and free from the jail.
3) U.N.H.C.R and the Red Cross do not come and hearing our requirements. So at least twice a week must contact us to fulfil our requirements.
4) The Hungarian Government must behave us as refugees or political Assailants.
5) Sufficient medical facilities
6) Ventilated accommodation with water facilities.
7) Must change the un discipline jail guards.
8) Must allow for the correspondents with our relatives, friends and the officers of in connection with our matters through telephone andletters.

Any of the way we require your support to win the plot and well known after we start our struggle, we will be cut-off the contacts. Therefore you are the organizations and individuals spread our voice for the world. We believe fully that you will shake your hands for our side, and we are jumping over the struggle. We believe again and again your support is our win.

Yours Sincerely

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடி

www.tamilarangam.net

சினிமா சினிமா சினிமா சினிமா சினிமா சினிமா சினிமா சினிமா சினிமா சினிமா சினிமா சினிமா சினிமா சினிமா

# சினிமா

# மூன்றாவது சினிமா

ஜமுனா ராஜேந்திரன்

மூன்றாம் உலகின் மூன்று மனிதர்கள். தற்காலத்தின் முழுமனிதனாக வாழ்ந்த கனவுமயமான புரட்சிக்காரன் சேகுவேரா. நாங்களும்

வருகிறோம் என்று ஐரோப்பியர்களிற்கு நெஞ்சிலறைந்து உலக சினிமாவில் அலைவீசியடித்த சினிமா இயக்குநர் ஸத்தியஜித்ரே. அடக்கப்பட்ட மனிதனின் மனசாட்சியை இன்றும் ஆத்மார்த்தத் துடன் சர்வதேசிய இலக்கிய மேடையில் பாடிக் கொண்டிருக்கும் பாலஸ்தீனக் கவிஞன் மொஹமத் தார்வீஸ். இவர்கள்தான் மூன்றாம் உலகின் மனசாட் சியாக திகளும் மனிதர்கள்.



முகமத் டார்விஸ்

இயேசுநாதர் மாதிரி சாந்தமானமுகம், திறந்த ஒளி வீசும் கண்கள், கம்பீரமான தாடி மரப்படுக்கையில் சுட்டுக்கொல்லப்பட்ட சேகுவேராவின் உடல் இலத்தின் அமெரிக்காவின் புதிய இயேசுநாதராக இன்றும் விடுதலை இறையாவலுக்கு உத்வேகம் வழங்கும் அந்த உயிரற்ற உடல்.



சேகுவாரா

திரும்பத் திரும்ப மறுபடி மறுபடி திரையில் வருகிறது. என் முகத்துக்குள் வருகிறது. கண்களு க்குள் வருகிறது. நெஞ்சுக்குள் வருகிறது. நரம்புகளில் சிலிர்க்கிறது. கண்களில் நீராகி முட்டிக்கொண்டு வருகிறது. மனம் கோபமுற்று தியாணம் கொ ண்டு விடுகிறது. குமுறிக் குமுறி அழ வேண்டும் எனும் துக்கம் கூடவே, நானும் நீயுமாகிப் போராட வேண்டு மென உத்வேகம்.

இதுதான் சேகுவேராவின் இறுதி நாட்கள் எனும் பி.பி.சி தொலைக்காட்சிப்படத்தில் நான் சமீபத்தில் பெற்ற அனுபவம். இந்த அனுபவத்தை இந்த சிலிர்ப்பை நான் பலசந்தர்ப்பங்களில் அடைந்திருக் கிறேன். கௌதம் கோசின் 'மாபூ மீ' படத்தை ப்பார்த்தபோது பெர்நாட்ஷா படமான 'சிங்கத்தின் குகை' பார்த்தபோது அவுஸ்ரேலியாவின் 'சிலியா' பார்த்த போது பெர்டினோ பெர்ட்டுலூசியின் '1949' பார்த்தபோது இந்த அனுபவத்தை நான் அடைந்தேன்.

சொந்தக் கிராமத்தின் தேனீர்க் கடையில் உட் கார்ந்து கொண்டு இரவு முடிவது தெரியாம நண்பனின் கை தொட்டுகர் கொண்டு தீவிரமாக பேசி அன்று நான் அறிந்த விடயங்கள் இவை. என் தோழனுக்கும், என் நண்பனுக்கும், எனது மக் மகளுக்கும் நான் பெற்ற அனுபவத்தைச் சொல்கின்ற உணர்ச்சி பூர்வமான அனுபவ ரசனைத் தொடரா கவே இதை எழுத நினைக்கின்றேன்.

சினிமா பற்றி படித்த விஷயங்களைப் பகிர்ந்து கொள்வதை விடவும் நான்பார்த்ததை, அனுபவித் ததை, வாழ்ந்ததைச் சொல்ல வேண்டும். நான் இங்கு சொல்லப்போகும் சினிமாக்கள் இரவு முடிய முடிய இருந்து கனத்த நெஞ்சுடன் தூக்கமின்றி துறவியின் மனோ நிலையில் இருந்து நான் பார்த்த படங்கள்.

இந்தப் படங்கள்திரும்பத் திரும்ப என்னை மூன்றாம் உலகின் மனிதன் என்று ஞாபகமூட்டின. மூன்றாம் உலகின் அரசியல் சினிமா என்கின்ற சொற்றொடர் பற்றி நாம் கொஞ்சம் பார்க்க வேண்டும்.

இந்த நூற்றாண்டில் இந்த நாட்களில் மூன்றாம் உலகம் எனும் கருத்து இப்போதை விடவும் அர்த்த முள்ள ஒன்றாகி விட்டது. சோவியத் யூனியனிலும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் சோசலிச சமூகம் என்று சொல்லப்படுபவை வீழ்ச்சியுற்ற ஆண்டுகள் இவை. மத்திய கிழக்கில் பேரரசான ஏகாதிபத்திய யுத்தக்கெடுபிடி தோன்றி வளைகுடா யுத்தம் நடந்து முடிந்த ஆண்டுகள்.

நிகரகுவாவில் ஜனநாயக முறையில் தேர்தல் நடைபெற்று டேனியல் ஒர்ட்பபேகா தனது புரட்சிகர கடமையை தொடர்ந்து வீழும் ஆண்டுகள். சிங்கம் போல் பிடரிமயிர் சிலிர்க்க அமெரிக்க ஏகாதிபத் தியத்திற்கு சவால் விட்டுக்கொண்டிருக்கும் பிடல் காஸ்ட்ரோவின் கர்ஜனை முன்னெப்போதையை விடவும் ஸப்தத்துடன் கேட்கும் ஆண்டுகள் இவை பெண்விடுதலை இயக்கங்களும் மாணவர் இயக்கங்களும் சூழலியல் இயக்கங்களும் முக்கிய சக்திகளாக போராடிவரும் ஆண்டுகள் இவை. கம்யூனிசம் பூச்சாண்டியை விட்டு விட்டு மூன்றாம் உலக நாடுகளின் இராணுவ அரசியல் வளர்ச்சியைக்காட்டி தனது இராணுவ செலவினத்தை அதிகரிக்கும். அமெரிக்க ஏகா திபத்திய சதியை வெளிக்கொணர்ந்த ஆண்டுகள்.

இன்றைக்கு சமூகமாற்றத்தின் உயிருள்ள வேர்கள் மூன்றாம் உலக நாடுகளில் தான் அழுத்தமாக ஊன்றியிருக்கின்றன. உலக விடுதலையும் மனித குல விடுதலையும் மூன்றாம் உலகப்போராளிகள் தான் தம் தோள்களில் சுமந்திருக்கிறார்கள்.அரசியல் வர்க்க அரசியல் எனும் எல்லையைத்தாண்டி வெகுதூரம் வந்து விட்டது. அமேசன் காடுகளை அளிப்பதை தடுத்து நிறுத்த நடத்தும் சூழலியல் யுத்தம் சிகோ மெண்டிஸை பலிகொண்டு விட்டது. இடது சாரி இயக்கங்களுக்குள்ளேயே பெண் விடுதலை முழுக்கால்கள் எழத்தொடங்கிவிட்டன.

மூன்றாம் உலகின் அரசியல் அமைதியான மேற்கத்திய ஜனநாயகமற்ற அரசியல் அல்ல. கொந்தழிப்பான போராட்ட அரசியல். சினிமா என்கிற கருத்துக்கூட மேற்கத்கைய அர்த்தத்தின் படி மூன்றாம் உலக நாடுகளில் நிற்க முடியாது.

அதி நுட்ப கமரா சாதனங்கள் இன்றி, ஸ்ரூடியோக்கள் இன்றி, பெரிய பெரிய சினிமாத் தியேட்டர்களின்றி , சினிமா வினியோகஸ்தர்களின்றி தெருக்களில் படங்கள் எடுக்கப்படுகின்றன.சிறிய திரைகளில் கிராமங்களில் தெருக்களில் அடர்ந்த காடுகளுக்குள் படங்கள் திரையிடப்படுகின்றன. கதாநாயகன் இல்லாமல் பாடல்களுக்கு பிண்ணணி இசையில்லாமல் கத்தாநாயகி இல்லாமல் அளந்து வைத்த நவரசம் இல்லாமல், பிரமாண்டமான



சத்தியஜித்ரே.

தன்மையில்லாமல் சினிமா எளிமையாக இருக்கின்றது.

ஐரோப்பிய நாடுகளிலேயே கூட பெர்ட்டினோ பெர்ட்டிலூசி தொலைக்காட்சியில் படங்களைத்திரை யிடுகிறார். போலர்சின் கோ்லாகோவ்ஸ்கி தொலைக்காட்சியில் பற்றுக்கட்டளை சொல்கிறார். மூன்றாம் உலக நாடுகளின் சினிமா என்று அகன்ற திரைகளை ஞாபகங்கொண்டு நாம் சொல்லத் தொடங்கினால் பொய்சொன்னவர்களாகி விடு வோம். பிதார்த்தத்தை மறந்தவர்களாகி விடுவொம். இந்தக் கண்ணோட்டத்திலிருந்து நாம் ஆனந்தப்ப ட்டவர்தனின் படங்களை நாம் விளக்க முடியாது. தீபா தன்ராஜின் படங்களை நாம் விளக்க முடியாது.

'யுத்தத்தின் பின்' மற்றும் 'ஹவாகு -மியாமி' போன் ற படங்களை நாம் விளக்க முடியாது.

ஆகவே மூன்றாம் உலக அரசியல் சினிமா என்பதை மிக வித்தியாசமான மூன்றாம் உலக யதார்த்தத்துடன் நாம் விளக்க முடியும். ரேமாண்டின் வில்லியம்ஸின்வாழ்க்கையை பிரிட்டிஸ் அரசிய லோடு விளக்குவது மூன்றாவது சினிமா.

சக்ளத் வாளா என்னும் பட்பார்ஸீயின் கம்யூனிஸ்ட் எம்பியின் வாழ்க்கையை இந்திய இடது சாரிப் பின்னணியோடு விளக்குவது மூன்றாவது சினிமா.

தொடர்ச்சி 2ம் பக்கம்

## புதியதோர் உலகம்

4ம் பக்கத் தொடர்ச்சி

பல்கலைக்கழக மாணவர்கள் சாகும் வரை உண்ணாவிரதம் இருப்பதற்கு ஆதரவு தெரிவித்து ஊர்வலம் ஒன்று அவள் கடை வீதியால் போகும் போது போய்க்கொண்டிருந்ததாம். ஊர்வலத்தில் போன இளைஞன் ஒருவன் 'அம்மா நீங்களும் வந்து எங்களுக்கு ஆதரவு தாருங்கள்' என்று கேட்டானாம். அந்த ஊர்வலத்தில் மாணவர்கள் தான் அதிகமாம். பெண்கள் மிகக்குறைவு. ஆனாலும் அவளுக்கு மனம் கேட்கவில்லை. வந்தவேலையை விட்டுப்போட்டு அப்படியே அந்த மாணவர்களுடன் ஊர்வலத்தில் சென்றிருக்கிறாள். ஊர்வலம் முடிந்தபின் நடை பெற்ற கூட்டமும் முடியும் வரை இருந்துவிட்டு வந்தி ருக்கிறாள். மகனே! நீ உன் அம்மாவை நினைத்துப் பெருமைப்படு. தமிழீழத்தில் ஒவ்வொரு தாயும் இப் படி மாறிக்கொண்டிருக்கிறார்கள். என்ற செய்தியை உன் நண்பர்களுக்குச்சொல்.

எம் அனைவரின் அன்பு முத்தங்களுடன் முடிக்கி றேன். உன் இலட்சியம் வெல்க என்று வாழ்த்து கிறேன்.

என்றும் பாசமுடன்,

உன் அப்பா.

சங்கர் அப்படியே அந்தக் கடிதத்தில் லயித்து நின்றான். உடலெங்கும் ஓர் புத்துணர்ச்சி வேகமாகப் பரவி ஓடியது.

( தொடரும்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வடக்கும் தெற்கும்

## மூன்றாம் அத்தியாயம்

பாலன்




கௌரியின் மனம் உறுதியாக இருந்தாலும் உடல் இதற்கு மேல் உள் வாங்கிக் கொள்ளக் கூடிய நிலையில் இருக்கவில்லை. மூன்று வருடங்களை கடந்து நான்காவது வருடத்தில் காலடி எடுத்து வைக்கும் போதும் அவளால் ஒரு கனவு காண்பதைப் போலவே அந்த நிகழ்ச்சியை நினைத்துப் பார்க்க முடிந்தது.

அன்று எங்கோ ஒரு மூலையில் நடந்த ஒரு தாக்குதலுக்காக அவள் உள்ளே தாக்கப்பட்டது அவளுக்கு மட்டுமே தெரிந்த விடயம். வழமை போலவே வெளிநாடுகளுக்கும் உலக ஸ்தாபனங்களுக்கும் இலங்கை ஒரு சனநாயக நாடு என்று கூறிவிட்டு தனது கடமை தொடர்ந்தது.

அம்மா ..........

அவள் அனுங்கியதைப் பொறுக்க முடியாமல் என்ன பிள்ளை வலிக்குதா என்றாள் அவளுக்கு ஒரு மாதத்திற்கு முன் திருமலையில் வைத்துப் பிடிக்கப்பட்ட ராசம்மா.

ராசம்மாவுக்கு வயது நாற்பது இருக்கும். மட்டக்களப்பு சிறை உடைத்து வெளியே வந்தவர்களில் சிலரை அவளது வீட்டிலே வைத்து சாப்பாடு கொடுத்தாள் என்று கூறி கைது செய்து வைத்திருந்தார்கள்.

இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்குத்தான் எத்தனை வலிமை. அவள் அடிக்கடி நொந்து கொள்வது உண்டு. இரண்டு பிள்ளைகளுக்குத் தாயான அவள் காதல் திருமணம் செய்து கொண்டவள். சாதி குறைந்த இடத்துப் பையனைக் காதலிக்கின்றாள் என்று பெற்றோர்கள் அவளை சாதி வலையில் வீழ்த்தி காதலை மரணிக்க வைக்க முயற்சி செய்த சமயம் பெற் றோரை வெறுத்து அவள் காதலித்தவன திருமணம் செய்து கொண்டாள். என் அன்றிலிருந்து அவளது குடும்பத்திற்கும் அவளுக்கும் எந்த வித தொடர்பும் இருக்கவில்லை. தந்தையின் கண்டிப்பான உத்தரவு. ராசம்மாவின் வீட்டில் காலடி எடுத்து வைத்தால் தான் உயிரோடு இருக்கும் வரை தன் வீட்டில் காலடி எடுத்து வைக்கக்கூடாது என்று. சாதியின் ஆளுமையின் கீழ் சகோதர பாசம் தோற்றுப் போயிற்று.

சாதியின் உச்சஸ்தாயின் கீழ் தாய்ப் பாசம் சாரம் அற்றதாகிவிட்டது. செய்கின்ற தொழிலை மையமாக வைத்து உருவாக்கப்பட்ட சாதியம் இன்று மனித நேயங்களுக்கு அப்பால் பட்டு நிற்பதும் உறவுகளை உள்வாங்க மறுப்பதும் கூட விசித்திரமானதே.

ராசம்மாவின் குடும்பத்தினர் வசதி படைத்தவர்கள். பெரியஅளவு பணக்காரர்கள் என்று சொல்லா விட்டாலும் அந்த ஊரிலே குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அளவு வசதியானவர்கள். அவளது தந்தை நினைத்திருந்தால் அவளை எப்போதோ வெளியே கொண்டு வந்திருக்கலாம். சனநாயக நாட்டில் வசதிபடைத்தவர்களுக்காக மட்டும் இருக்கும் ஒரு உரிமை தான் லஞ்சம் . அவளின் கணவனிடம் மட்டும் ஐம்பது ஆயிரம் ரூபா இருந்திருந்தால் அவள் பிடிபட்ட அடுத்த நாளே வெளி வந்திருப்பாள். தினக்கூலிக்கு வேலை பார்க்கும் அவளது கணவனினால் முடிந்தது அவளுக்கு மாதம் ஒரு கடிதத்தை எழுதுவதுதான். அதுவும் கிடைக்கின்றதோ இல்லையோ என்பது அவளுக்கு தெரியாது.

ராசம்மாவின் குரலுக்கு தலையசைத்துப் பதில் கூறி விட்டு மறு புறமாகப் புரண்டு படுக்க எத்தனித்தாள் கௌரி. அவளால் அது முடியவில்லை. மனிதர்கள் அடிப்பது போலவா அவள் அடிக்கப்பட்டாள். மனிதைபிமானம் என்பது என்ன என்று அவர்கள் அறிந்திருப்பார்களோ என்ற ஐயப்பாடு எழும் வகையில் அல்லவா அவள் துன்புறுத்தப்பட்டாள்.

ராசம்மாவுக்கு அவ்வளவு சித்திரவதை இருக்கவில்லை. பிடிபட்ட நாட்களில் அடியும் உதையும் விழுந்தாலும் பின்னர் அவளை விசாரணைக்கு என்று அழைப்பது கிடையாது. மட்டக்களப்பு சிறையிலிருந்து தப்பி ஓடியவர்களில் யார் யார் அவள் வீட்டிலே தங்கி நின்றார்கள் என்ற உண்மையை கக்க வைக்கும் வரையில் ராசம்மா தாக்கப் பட்டபோது அவளாலேயே அவளை நம்ப முடியவில்லை.

தோட்டத்தில் வேலை செய்து அவள் கரங்கள் மட்டும் மரத்திருக்கவில்லை. விடுதலைக்காக அர்ப்பணித்திருந்தவர்களின் உயிரைக் காப்பாற்றுவதில் அவள் மனமும் தான் மரத்திருந்தது. ஒரு வாரமாக அவள் திருமலை விமானப் படைகளினால் நிலத்திலே போட்டு மித்திக்கப்பட்ட போதும் அவளால் எப்படி உண்மையை மறைக்க முடிந்தது என்பது ஆச்சரியம் தான். பெண்கள் மென்மையானவர்கள் பூப்போன்றவர்கள் என்று பெண்களைப் பலகீனர்களாக ஆக்கி தங்கள் மேலாதிக்கத்தை நிலைநாட்டும் ஆண் மேலாதிக்க சமுதாயத்தில் இலைமறைகாயாக இருக்கும் எத்தனையோ ராசம்மாக்கள் இந்தப் போராட்டம் வெளியே கொண்டு வந்திருக்கின்றது. மாறி அவர்களின் சிந்தனை வளர்ச்சியினை அடியோடு வேரறுத்தும் விட்டிருக்கின்றது.

கௌரி திரும்பிப் படுக்க முயற்சி செய்வதை பார்த்த ராசம்மா அவள் திரும்பிப் படுக்க அவளது கரங்களினால் மெல்லப் பிடித்து உதவிசெய்தாள். பதிலுக்கு அவள் நன்றியை தனது வரண்டு போன இதழ்களை விரித்து வழங்கிய புன்னகை அடையாளம் காட்டியது.

அவர்கள் இருவரும் இன்னும் நான்கு பெண்களும் காலியிலுள்ள பூசா இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள். தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள் என்பதை விட அடித்து உதைத்து வைத்திருந்தார்கள் என்பது மிக மிகப் பொருந்தும்.

பூசா இராணுவ முகாம் தென்னிலங்கையிலேயே பெரிய இராணுவ முகாம் மட்டுமல்ல முப்படைகளையும் பயிற்றுவிக்கும் தளமும் கூட. காலி நகரத்திலிருந்து சுமார் ஒன்றிரண்டு மைல்கள் தொலைவில் அமைந்திருந்த பூசா முகாம் தமிழ் பேசும் மக்களால் மறக்கமுடியாத ஒரு இடம். சித்திரவதையின் கோட்டை என்று கூட சொல்லலாம்.

பூசா முகாமிற்கு இன்னொரு சிறப்பிருக்கிறது. வெள்ளையர்ககள் இலங்கையை அடிமை கொண்டபோது காலியின் கடற்கரையோரமாகக் கட்டிய கோட்டையில் தான் இந்த முகாம் அமைந்திருக்கிறது. சுற்றிவர தென்னை மரங்களும் சிறிய சிறிய வேப்பமரங்களும் காட்சி கொடுக்க நடுவிலே கைவிடப்பட்ட கைத்தொழிற் பேட்டை ஒன்றின் கட்டடங்களைச் சுற்றி முள்ளுக் கம்பிகளினால் வேலியிடப்பட்ட தடுப்பு காவல் முகாம்கள். ஆங்கிலேயனின் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட குதிரைப் பந்தய மைதானமும் இந்த முகாமுக்குள்ளேயே அமைந்திருந்து.

சுமார் ஆறு ஏழு கட்டடங்கள். ஒவ்வொரு கட்டடத்திலும் இருநூற்றுக்கும் மேற்பட்டவர்களை அடைத்து வைக்கலாம். உண்மையில் ஐம் பது பேர் மட்டுமே இருக்கக் கூடிய இடவசதியே அதனுள் இருந்தாலும் இருநூறு பேர் சர்வதேச சட்ட விதிகளுக்கிணங்க (அரசின் பிரகாரம்) அடைத்து வைக்கப்பட்டிருந்தார்கள்.

சுற்றி வளைக்கப்படுவதும் ஆடு மாடு போல கட்டி இழுத்து வருவதும் அடுத்து சித்திரவதை செய்து விட்டு பயங்கரவாதி என்று பட்டம் சூட்டி விட்டு அடைத்து வைப்பதும் அங்கு சர்வ சாதாரணமாக நடந்து கொண்டிருந்து.

அங்கே வடக்குப் புறமாக இருந்த உள்ளேயே குளிக்கக் கூடிய வசதிகளுடன் இருந்த ஒரு பகுதி கட்டடத்தில் தான் இவர்கள் அடைத்து வைக்கப்பட்டிருந்தனர்.

கௌரி ஏன் உம்மைக் கொண்டுபோய் நேற்றிரவு அடிச்சவங்கள்? அவளுடன் கூட இருந்தவள் ஒருத்தி அக்கம் பக்கம் பார்த்து விட்டு கௌரியின் அருகில் சென்று அமர்ந்தவாறு கேட்டாள்.

தெரியேல்லை. கௌரியின் பதில் வாயிலிருந்து உதிர்ந்தபோது கண்களிலிருந்து சில துளி கண்ணீர் அவள் மார்போடு உருண்டு சென்றது.

ஒண்டும் கேக்கேல்லையா?

கேட்டவங்கள்

அந்தப் பொம்பிளை சி.ஐ.டி இருந்தவளா?

இல்லை.

அவள் அதற்கு மேல் கேள்வி கேட்க விரும்பவில்லை. அவளுக்குத் தெரியும் சுஜாதா என்கின்ற அவர்களை விசாரிக்கும் அந்தப் பெண் சி.ஐ.டி. யும் இல்லை என்றால் அங்கு என்ன நடந்திருக்கும் என்று.

அவளும் அந்தக் கொடுமைகளை எல்லாம் அனுபவித்தவள் தானே.

கௌரியை நேற்றுக் மஸ்கடைக்கு கொண்டு போகும் போது அவங்கள் கதைச்சது என்ரை காதிலை விழுந்தது அதுக்குத்தான் அடிச்சிருப்பாங்கள் எண்டு நான் நினைக்கிறன். ராசம்மா அங்கிருந்த மட்டக்களப்பு பெண்ணிற்கு சொன்னாள்.

என்னவாம்...

யாரோ கொழும்பிலை பிடி பட்டிருக்கிறானாம். அவன் கொடுத்த தகவலின் படி கௌரிக்கும் அந்த விசயத்திலை சம்பந்தம் இருக்குதாம்.



கௌரியை ஒண்டும் கேக்கேல்லை எண்டால் இண்டைக்கு கூட்டிக் கொண்டு போவாங்களோ தெரியாது என்ன? மட்டக்களப்பை சேர்ந்தவள் துக்கத்துடன் கூறினாள்.

மஸ் கட என்பது சிங்களச் சொல். அதனுடைய அர்த்தம் இறைச்சிக் கடை என்பது. விசாரணை என்ற பேரில் மஸ்கட அறைக்கு அழைத்துச் செல்லப்படுபவர்கள் யாரும் ரத்தம் சொட்டாமல் வருவதில்லை. கிட்டத்தட்ட பொருத்தமான பெயர். அங்கே தமிழீழ வரலாற்றின் ஒரு பகுதி அந்த அறைகளின் சுவரிலே பொதிந்து கிடக்கும். வாகனங்கள் திருத்தும் ஒரு மெக்கானிக் கடையில் உதிரிப்பாகங்களைக் கழற்றுவதற்கு என்னென்ன உபகரணங்கள் இருக்குமோ அந்த அறையிலும் மனித உதிரிப்பாகங்களை அக்கு வேறு ஆணிவேறாக பதம் பார்க்க தேவையான உபகரணங்கள் இருக்கும். பெரிய கட்டைகள் ஒருபுறம், சிமெந்து நிரப்பப்பட்ட எஸ். லோன் குழாய்கள் ஒரு புறம்மற்றும் பொக்ஸ், கம்பிகள் கூடவே சோடா போத்தில்கள் அப்படி இன்னும் பல.

தொடர்ச்சி 6ம்பக்கம்

www.tamilarangam.net



## சிதறல்கள் 6ம் பக்கத் தொடர்ச்சி

இண்டைக்கும் மாமி கேட்டிட்டுப் போறா. குமர்ப்பிள்ளைகள்

ஊர் சுத்திறதும் வாறதும் பாக்க நல்லாயோ இருக்கு எண்டுநக்கலாய் கேட்கிறா?

ஏனம்மா என்னோட படிச்ச பிள்ளைகள் எல்லாம் இயக்கத்திற்கு போயிருக்கினம். அவையைப்பற்றி ஒன்டும் சொல்லேல்லையாமோ. ஒ பின்ன அவ எப்படிச் சொல்லுவா? சொன்னா கழுத்தில மட்டையோட போஸ்ட்டில எல்லோ நிக்க வேணும். நீங்கள் என்ன சொன்னனீங்கள்?

நான் என்னத்த பிள்ளை சொல்லிறது. கேட்டுக்கொண்டிருந்தன். கதைக்கிறவ எதைப் பற்றியும் கதைப்பினம் தானே. என்ரை பிள்ளையைப் பற்றி எனக்கு தெரியும் தானே. நீ வடிவாச் சாப்பிட்டு கையைக் கழுவிக் கொண்டு வா.

கை கழுவ எழுந்த ஆனந்திக்கு அம்மாவும் மாமியும் குறிப்பிட்ட சங்கத்தையும், அதில் தான் சேர்ந்தவிதமும் ஞாபகத்திற்கு வருகிறது. அப்பா இறந்த போது அவள் க.பொ.த (உயர்தரம்) பரீட்சையை எழுதி விட்டு முடிவை எதிர்பார்த்து வீட்டில் இருந்தாள். நாட்டுப்பிரச்சனை மோசமாகியிருந்த நிலமை. இவளுடன் படித்தவர்களில் பாதிப்பேருக்கு மேல் இயக்கம் என்றும். வெளிநாடு என்றும் போய் விட்டிருந்தனர். தகப்பனும் மகளும் சாதாசிவத்து மாரடைப்பு வந்தஅந்த மாலைவரை வழக்கம் போல உரையாடிக் கொண்டிருந்தனர்.

சதாசிவத்தின் கருத்துப்படி ஒன்றில் நாட்டு நிலமைக் கேற்றபடி எம்மை நாமே மாற்ற வேண்டும். அல்லது மாறிவிட வேண்டும் வெளி நாட்டிற்கு. எம்மை நாமே மாற்றுவதானால் தவிர்க்கமுடியாதபடி ஏதாவது ஒரு இயக்கத்திற்குள் எம்மை இணைத்துக் கொள்வதென்பது கட்டாயமாகிவிடும் என்று சொல்ல, ஆனந்தியோ தந்தையை எதிர்த்து வாதாடுகிறாள். அவளது கூற்றுப்படி அவளுக்கு இரண்டிலுமே சம்மதமில்லை. இயக்கத்திற்கு போவதென்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாததாக இருக்கிறது அவளுக்கு. சரியான பாதையில் இந்த இயக்கம்தான் போய்க் கொண்டிருக்கிறது என்று சொல்ல முடியாதபடி

நாளுக்கொரு குழப்பம். அடிதடி. ஆரவரம். கருத்து மோதல்கள். அதிலும் பாதிப்பேர் சாதாரண சமுதாய அந்தஸ்த்தைத் பெற்று விடவேண்டும் என்ற அவாவினால் சேருவதையும் பார்த்திருக்கிறாள். இப்படியிருக்க அப்பா சொல்வதைப்போல இயக்கத்தோடு எம்மை இணைத்துக் கொள்வதால் சமுதாயத்திற்கு என்ன நன்மை? மீண்டும் சதாசிவம் குறுக்கிட்டு கருத்து மோதல்கள் ஒரு ஆரோக்கியமான வளர்ச்சிக்கு வடிகால் அல்லவா என்று கேட்க, ஆனந்தி மீண்டும் அப்படியென்றால் அதற்கும் ஒரு மேலே போய்விட்ட நிலைமையை என்ன பெயரிடுவீர்கள் என்று கேட்கிறாள். ஏனே அவளுக்கு அப்பாவின் கருத்தை ஏற்றுக் கொள்ள இயலவில்லை. சதாசிவமும் புன்சிரிப்புடன் மகளின் பேச்சு வன்மையை ஆராய்கிறார்.

அப்ப ஆனந்தி உன்னை வெளிநாட்டிற்கு அனுப்பி விடுறன்போறியா, போங்கோப்பா. நான் மட்டும் எந்த இடத்திற்கு தனியாய்ப் போயிறக்கிறன் உங்களை விட்டிட்டு. எல்லாத் துக்கும் முதல் எங்கட ஊரில இருக்கிற சந்தோசம் எங்க கிடைக்கும்? நாங்கள் எல்லாரும் லீவுக்கு கொழும்பில போய் நிண்டிட்டு திரும்பி வந்து ஊருக்குள்ள ஓடியாடிக் கதை சொல்லிக்கொண்டு வந்த நாங்கள்? கண்டறியாத கொழும்பு. இந்த ஊரிண்ட சந்தோசம். அமைதி எல்லாம் எதுக்கும் ஈடாகுமே எண்டுதானே? இப்ப அமைதி இல்லாட்டியும் ஏதோ ஒரு சந்தோசம் ' என்று சொல்லி பேச்சு அன்று அத்துடன் நிறுத்த சமையல் அறையில் நின்ற கனகம் நல்ல தகப்பனும் மகளும் வந்து வாய்ச்சிருக்கினம் எனக்கு.' என்று சாப்பிட அழைத்தாள். அடுத்த நாளே எதிர்பாராவிதமாக சதாசிவம் காலமாகிவிட அந்த இழப்பின் கொடுமையிலிருந்து முதலில் மீண்டு வந்தவள் ஆனந்தி தான். அதன் பின் வந்த சில மாதங்களில் சதாசிவத்துடன் பணியாற்றிய ஓய்வு பெற்ற ஆசிரியர் மணியம் வீடுதேடி வந்து உதவியின்றித் தவிக்கும்,

வன்முறையால்ப் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு, உதவி செய்வதற்காக பொதுப்பணிச்சங்கம் ஆரம்பிக்க இருப்பதையும் ஆனந்தியின் உதவியைபெற விரும்புவதாகவும் சொல்ல உடனே சம்ம்தம் தொரிவித்தாள். எந்தவிதமான இயக்கச் சார்பற்ற அமைப்பு என்பதும் வீட்டிலிருந்தால் தந்தையின் நினைவு துன்புறுத்தும் என்பதும் சதாசிவம் இருந்திருந்தால் மகளை தடுத்திருக்க மாட்டார் என்பதும் கனகத்தை சம்மதம் தெரிவிக்க வைத்தன.

வீடு வீடாச் சென்று , பணம் உடுப்புகள் வீட்டுக்குத் தேவையான பாவனைப் பொருட்களைச் சேர்த்து வந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு இயலுமான வரை கொடுத்து . உதவி வருகிறார்கள் சங்கத்தினர். ஆனந்தியைத் தவிர இன்னும் சிலர் சங்கத்து உறுப்பினராக இருந்தனர். சுரேஸ் உட்பட.

'ஆனந்தி நான் சொல்வதை வடிவாய் யோசிச்சிட்டு நல்ல பதிலாய் சொல்ல வேணும். ரவியைக் கல்யாணம் கட்ட உனக்கு சம்மதமோ என்று மாமி கேட்கிறா.

சங்கடத்துடன் தாயைப் பார்த்து ஆனந்தி எதுவும் சொல்லாமல் இருக்கிறாள். பழைய படி கனகம் "அவசரமில்லை ஆறுதலா முடிவைச்சொல்லு.'

நாளைக்கு சொல்லுறனம்மா' என்ற மகளின் பதில் தாயை திகைக்கவைக்கிறது. எதையும் தட்டாமல் செய்யும் ஆனந்தி இன்று என்ன யோசிக்கிறாள். அவளுக்கு சிறுவயதுமுதலே நன்கு தெரிந்தவன். கிட்டத்தட்ட சதாசிவத்தின் குணங்கள் ஆனந்தியைப்போலவே ரவியிடமும் பதிந்திருந்தன. ரவி சதாசிவத்தின் தங்கையின் மகன். படித்து நல்ல வேலையிலிருப்பவன்.

திருமணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர் என்பார்களே. ஒரு வேளை ஆனந்திக்குத் தன் எதிர்கால வாழ்வை நன்றாகச் சிந்தித்துத் தீர்மானம் செய்ய வேண்டிய விருப்பம் இருக்கலாம். மகளை சிறுபிள்ளை போல எண்ணியதற்காக வெட்கப்பட்டு, அவள் நன்றாக யோசிக்கட்டும் என்று நினைத்த கனகத்திற்கு பட்டென இன்னோர் எண்ணமும் எழுகின்றது. 'ஆனந்தி.... நீ யாரையாவது விரும்பியிருந்தாலும் சொல்லு. யாரையெண்டாலும் வேளைக்கு செய்து வைக்கவேணும். சனம் நல்லது செய்ய வெளிக்கிட்டாலே நாலு கதை கதைக்கும்"

'ஏனம்மா பொதுவாய் உதவி செய்யிறதே குற்றமோ?

'இல்லை ஆனந்தி. ஆனல் இதே உதவியை நீ கல்யாணம் கட்டினாப் பிறகும் செய்யலாம் தானே? அதுக்குப் பிறகு ஒருத்தரும் ஒண்டும் சொல்லவும் ஏலாது. வாறவர் இதுக்கெல்லாம் சம்மதமாமே அம்மா?' சாதாரணமாகக் கேட்டவளுக்கு தாயின் பதில் வியப்பை அளித்தது.

'ரவி, உன்னைப் பற்றி யாரோ தவறாக் கதைத்ததைக் கேட்டுப் போட்டு தானாய் வந்து என்னட்டைக் கதைச்சவன். இது மாமிக்கும் தெரியாது. ஆனந்தியைக் கல்யானம் கட்டினாப் பிறகு அவள் என்ட சம்மதத்தோட என்ன உதவியும் செய்யட்டும் எண்டு சொல்லுறான்."

தாய்க்கு எந்தப் பதிலும் தராமல் மௌனமாக உறங்கச் சென்ற ஆனந்திக்கு உறக்கம் வரவில்லை. தாய்க்கு உடனடியாக சம்மதம் தெரிவிக்க முடியாதபடி நேற்று நடந்த நிகழ்ச்சி நினைவுக்கு வருகிறது. விடிந்தால் முடிவு தெரிந்து விடும். தகப்பனைப் போல பரிவுடன் நடந்து கொள்ளும் மணியம் வாத்தியார் அவளுடன் சுரேஸைப் பற்றிக் கதைக்கத் தொடங்கினார். தன் மூலமாகத் தான் ஆனந்தி கடந்த இரண்டு வருடங்களாக சங்கத்துக்கு இவ்வளவு உதவி புரிய நேர்ந்ததையும், மனம் திருப்தியடையக் கூடிய முறையில் சங்கம் கடமையாற்றுவதையும் குறிப்பிட்டு விட்டு தொடர்ந்தும் இப்படியான பணியை அவள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அத்துடன் தகப்பனின் ஸ்தானத்திலிருந்து தானே அவளுக்குத் திருமணம் பேச இருப்பதாக சொல்லிவிட்டு, கருத்து ஒன்றாகிப் போன இருவரால்தான் குடும்பத்தையும், சமூகத்தையும் ஒரு சேரப் பார்க்க முடியும் என்று கூறி, தான் சங்கத்துள் குறிப்பிடத்தக்க ஒருவனாகி இருக்கும் சுரேஸிடம் இதுபற்றி கதைக்க இருப்பதாகவும் ஆனந்திக்கு இதுவிடயம் சுரேஸிற்கு காட்டிக் கொள்ள வேண்டாம் என்றும் வேண்டியிருந்தார். முடிவு நன்றாக இருந்தால், தானே கனகத்துடன் கதைப்பதாகக் கூறியபோது அவளால் அவரை மீறி எதுவும் சொல்ல இயலவில்லை.

அவளைப் பொறுத்த வரையில் சுரேஸ் மீது எந்த விதமான காதலோ அல்லது தனிப்பட்ட ஈர்ப்போ கிடையாது. ஆனால் மணியம் வாத்தியார் கதைத்த பின்னர் ஒருவேளை அவர் சொன்னது போல வேறு யாரையாவது மணந்தால் தனது உதவி புரியும் மனப்பாங்கையும், வீடு வீடாகச் சென்று ஒவ்வொரு பொருளாக வாங்கிச் சேர்க்கும் இந்தச் சங்கத்தின் குணத்தையும் புரிந்து கொள்வார்களா என்பதும் யோசிக்க வைக்க வீடு திரும்பியவள் இதைப் பின்னர் சிறிது மறந்து விட்டாலும் தாயின் பேச்சுக்கள் அதை மீண்டும் ஞாபகப்படுத்தின. எதற்கும் நாளைக் காலை சங்கத்துக்குப் போகும் போது முடிவுடன் அம்மாவிடம் மணியம் வாத்தியாரையும் அழைத்து வரலாம் என்று நினைத்தவாறே உறங்கிப் போகிறாள்.

சங்கத்தின் வாசலை எட்டிய போதே மனம் படபடத்தது. அதோ மணியம் வாத்தியார் இருக்கிறார். 'வா ஆனந்தி.... உள்பக்கம் சுமதி நிற்கிறா. நேற்று வந்த காசை ஒருதரம் இரண்டு பேரும் சரி பார்த்து எழுதி வையுங்கோ' எதையோ எதிர்பார்த்து வந்தவளுக்கு அவரின் சாதாரணமான அலுவல் விடயங்கள் வியப்பளிக்க உள்பக்கம் போகிறாள். சுமதி என்ற அவளது தோழி ஆனந்தியை அழைத்துக் காசைக் கொடுத்த பின் ' ஆனந்தி உனக்கு எப்படிச் சொல்லுறதெண்டு தெரியேல்ல. மணியம் வாத்தியாருக்கு நான் தொண்டையைச் செருமிக்கொண்டு எண்டு சுரேஸோட கதைக்கேக்குள்ள நானும் நிண்டனான். அவர் சொன்ன பதில் என்ன தெரியுமே? எனக்கு வீட்டில இருக்கிற பொம்பிளையாய்ப் பாருங்கோ வாத்தியார். ஆனந்தி எல்லார் வீடு வழியவும் போய் வாறதும் சிரிக்கிறதும், கதைக்கிறதும் எனக்குப் பிடிக்கேல்ல. நான் போய்க் காசு கேட்டால் அல்லது துணிமணி உதவி கேட்டால் ஒருத்தனும் தாறானில்ல. அதே நேரம் இவ போய்க் கேட்ட உடன எல்லோரும் பேசிப் பேசி என்றாலும் தரீனம். நாளைக்கு என்னைக் கல்யானம் கட்டிப் போட்டும் உவ உப்பிடி நடந்தா என்னைப் பார்த்து அவனவன் சிரிப்பாய்ச் சிரிப்பான். கொஞ்சக் காலமே. இரண்டு வருடமாய் சங்கத்தோட தானே நிக்கிறா எண்டு சொன்னவர். வாத்தியார் பேசாமல் திரும்பிப் போட்டார். "

ஆனந்திக்கு சிறிது நேரம் என்ன செய்வதென்று தெரியவில்லை. ஒரே சங்கத்தில் கண்ணுக்கு முன்னே கலந்துரையாடி வேலைகளைப் பங்கிட்டு பொதுவாய் உதவி புரிந்ததை இவன் பிழை என்கிறானா? அல்லது சங்கத்தில் பெண்கள் இருப்பதே பிழை என்கிறானா? அல்லது பெண்கள் எல் லோரும் இயன்றவரை உதவி புரிய வேண்டும். ஆனால் தனக்கு வருபவள் அப்படியிருக்கக் கூடாது என்கிறானா? இதில் எதை அவளை நிராகரித்ததற்கு காரணமாக்குவது? தன்னுடைய திருமணம் சம்பந்தப்பட்ட விடயம் என்று அவள் கலங்கி நிற்கவில்லை. ஆனாலும் சில சமுதாயச் சிதறல்கள் இங்கும் சிதறி இருப்பதை அவளால் உணர முடிந்தது. ஒரே சங்கத்தில் கடமை புரியும், படித்த, பண்பான இவனால் இவளை மனைவியாக ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அதற்காக எல்லோரும் அப்படி என்று சொல்வதற்கில்லை என்று நினைத்தபோது நேற்று அம்மாவின் ரவியைப்பற்றிய கதையும் மனதில் வந்து போனது. அவற்றை எல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு அலுவலகத்தில் வேலையாயிருந்த சுரேஸிடம் பணத்தையும், அது சம்பந்தப்பட்ட விபரங்களையும் கையளிக்கச் சென்றவளை சுமதி வியப்புடன் நோக்கினாள், எப்படி இவளால் கோபப்படாமல் இருக்க முடிகிறது என்று. 'வாங்கோ ஆனந்தி......உங்களைத்தான்

பார்த்துக் கொண்டிருந்தனான். இண்டைக்கு வாத்தியார் சொன்னபடி காசு கொண்டு போய்க் கொடுக்க ஏலாது. இன்னும் இரண்டாயிரம் ரூபா தேவை. நீங்கள் ஒருக்கால் திரும்பவும் ஊருக்குள்ள போய்க் காசு சேர்க்க வேணும்' 'அதுக்கென்ன சுரேஸ் . நான் இப்பவே வெளிக்கிடுறன்' என்று புன்னகையோடு சொன்னவளின் புன்னகையின் அர்த்தம் புரியாது அவனும் சிரித்தான். ஒ... நான் காசு சேர்க்க வீடு வீடாகப் போய்வரலாம் .ஏனென்றால் நான் இன்னொருவனுக்கு மனைவியாகப் போகிறவள். உனக்கல்ல என்று நினைத்தபடியே ஆனந்தி புறப்படுகிறாள்.

## ஒரு ஜீவனின்- - -
## 7ம் பக்கத் தொடர்ச்சி

தொடங்கியது. சாப்பிட முடியாமல் தவித்தது.

மெதுவாக அதன் வாயில் சாப்பாடுகளை ஊட்டினேன்.

எனிமேல் ராஜு வீட்டைவிட்டுப் போனாலும் தண்டிப்பதில்லை என்று முடிவெடுத்து விட்டேன். ஆனால் அது மட்டும் வீட்டை விட்டு வெளியே போவதில்லை. இரவு வேளைகளில் எங்களின் உறக்கத்தின் நடுவே இடையிடையே அதன் குரையல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## மாதகல் மோதலில் முக்கிய புலி உறுப்பினர் பலி

(வவு னியா)

தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய படை அணிகளில் ஒன்றான சார்ள்ஸ் அன்ரனிப் படைப் பிரிவின் தலைவர் ராஜன் அரச படைகளினால் கொல்லப்பட்டுள்ளார் என்று ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது.

மாதகலில் அண்மையில் படைகளினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போதே ராஜன் கொல்லப்பட்டதாக வவுனியாவுக்குக் கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது இவ்விதமிருக்க, மட்டக்களப்பு அக்கரைப் பற்றுப் பகுதிகளில் படைகளின் தாக்குதல்கள் உக்கிரமாக உள்ளதனால் அப்பகுதி மீனவர்கள் மீன் பிடிக்க செல்ல முடியாதிருக்கின்றது என்று ஆவணி மாதம் 30 ஆம் திக தி அன்று கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்பகுதியை அண்டியுள்ள இடங்களில் உள்ள காடுகளில் படைகளின் தேடுதல் வேட்டை தொடருவதாகவும் இடையிடையே பலத்த குண்டுச் சத்தங்கள் கேட்ட வண்ணம் உள்ளதாகவும் அப்பகுதி செய்திகள் தெரிவிக் கின்றன.

இக்கிராமம் அண்மையில் பொலிசாரினால் சுற்றி வளைக்கப்பட்டு பெருந்தொகையானோர் கைது செய்யப்பட்டதும் பின்னர் ஐவர் தவிர மற்றையோர் விடுவிக்கப்பட்டதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

## 'எம்மால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பொலிசார் விடுவிக்கப்படுவர்' – புலிகள்

(யாழ்ப்பாணம்)

இந்திய இராணுவம் இலங்கையை விட்டு வெளியேறியதிலிருந்து இலங்கை அரசுடன் ஆரம்பித்த யுத்தத்தில் பிடிக்கப்பட்டு இதுவரை விடுவிக்கப் படாதிருந்த கைதிகளை விடுதலை செய்யத் தாம் தயார் என்று புலிகள் யாழில் அறிவித்துள்ளனர்.

புலிகளின் வசம் இருக்கும் சுமார் 41 பொலிசாரையும் ஒரு இராணுவத்தினையும் தாம் நிபந்தனை இன்றி விடுவிக்கப் போவதாக புலிகள் அறிவித்துள்ளார்கள் என்று கொழும்புக்குக் கிடைக்கும் செய்திகள் ஊர்ஜிதம் செய்கின்றன.

அண்மைக்காலங்களில் ஸ்ரீ லங்கா இராணுவத்தினால் மேற்கொள்ளப்படும் தாக்குதலின் நிமித்தம் இவர்களை பாதுகாப்பது கடினம் என்று கருதியே புலிகள் இவர்களை விடுவிக்க சம்மதம் தெரிவித்துள்ளார்கள் என்ற செய்தி பரவியுள்ளபோதும் இது உண்மையான காரணம் ஆக இருக்க முடியாது என்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

புலிகள் பிடித்து வைத்திருக்கும் தமிழ் கைதிகள் 4000 ற்கும் மேல் இருக்கும் போது 40 பேரை வைத்து சமாளிப்பது எவ்வாறு கடினமாகலாம் என்று இவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

## மன்னாரில் அமைதி

(மன்னார்)

கடந்த சில நாட்களாக மன்னாரில் எந்த விததாக்குதல் சம்பவங்களும் நடைபெறவில்லை என்று வவுனியாவுக்கு வரும் பயணிகள் தெரிவிக்கின்றனர். மன்னார் நகரம் இப்போது வழமைக்குத் திரும்பியுள்ளது என்றுகூறும் இவர்கள் தமக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களைப் பெற்றுக் கொள்ள வவுனியா வந்து செல்கின்றார்கள் என்று தெரியவருகின்றது.

## முல்லைநகரில் குண்டுவெடிப்பு எட்டுப்பயணிகள் ஸ்தலத்தில் பலி

(முல்லைத் தீவு)

ஆவணி மாதம் முப்பதாம் திகதி அன்று பஸ் வண்டி ஒன்றினுள் வெடித்த குண்டு ஒன்றினால் எட்டுப் பேர் உயிரிழந்துள்ளனர். இச்சம்பவத்தில் மேலும் 25 பேர் காயமடைந்துள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

குண்டு வெட்டிப்புச் சமபவத்திற்கு யார் பொறுப்பாளிகள் என்பது இன்னமும் தெரியவரவில்லை.

பிந்திக் கிடைத்த தகவல் ஒன்றின்பிரகாரம் சார்ள்ஸ் அன்ரனிப் படைப் பிரிவின் தலைவர் ராஜன் என்றழைக்கப்படும் சோமசுந்தரம் சற்குணம், திருமலையைச் சேர்ந்த கணேசன், துணுக்காயைச் சேர்ந்த வன்னி என்று அழைக்கப்படும் கணபதிப் பிள்ளை கணநாதன் ஆகியோர் மாதகலில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். படைகளிற்கு எதிரான தாக்குதலின் போதே இவர்கள் இவ்வண்ணம் கொல்லப்பட்டுள்ளனர். தற்போது மாதகல் பகுதிகள் படைகளின் கட்டுப்பாட்டில் இருப்பதாக அறியமுடிகிறது.

## பத்து லொறிகளுக்கே யாழ் செல்ல அனுமதி

(வவுனியா)

வவுனியா மாவட்டத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு உணவுப் பண்டங்களை எடுத்துச் செல்லும் லொறிகள் வவுனியா தாண்டிக் குள இராணுவ தடை முகாமருகே தரித்து நிற்கின்றன.

நாள் ஒன்றுக்கு பத்து லொறிகள் மட்டுமே யாழ் செல்ல அனுமதிக்கப்படுவதால் இவ்வாறு லொறிகள் காத்துக் கிடக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு உணவுப் பொருட்களை எடுத்துச் செல்லும் லொறிகள் ஆறுக்கும் முதல் உரிமை வழங்கப்படுவதா இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு கும்புருப்பிட்டி என்ற இடத்தில் வைத்து இரு புலி உறுப்பினர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

புலிகளினால் யாழில் வைத்து விடுவிக்கப்படுவர் என்று அறிவிக்கப்பட்ட 42 படைகளைச் சேர்ந்தவர்கள் விவகாரம் பேச்சு வார்த்தையை நோக்கிய ஒரு புலிகளின் சமி

தொடர்ச்சி 2ம் பக்கம்

## தடுத்து வைக்கப்பட்டோர் கொழும்பில் விடுதலை

(வவுனியா)

வடபகுதிக்கான பொருளாதாரத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டதிலிருந்து இன்று வரை பலர் வவுனியா தடை முகாமருகில் வைத்து கைது செய்யப்பட்டது யாவரும் அறிந்ததே.

தடைசெய்யப்பட்ட பொருட்களை யாழ்ப்பாணத்திற்கு எடுத்துச் செல்ல முனைந்தார்கள் என்ற குற்றத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பல பொதுமக்களில் 26 பேர் ஆவணி மாதம் 29 ஆம் திகதி அன்று விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள். இவர்கள் கொழும்பில் வைத்து விடுவிக்கப்பட்டார்கள் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

## டென்மார்க் திருப்பியனுப்பிய இளம்பெண் விடுதலை

(டென்மார்க்)

டென்மார்க்கில் அகதிகள் அந்தஸ்த்துக் கோரி தஞ்சம் புகுந்த யாழ்ப்பாணத்தைச் சேர் ந்த இளம் பெண் ஒருவர் அந்த நாட்டு அரசினால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளார். இலங்கை குடிவரவுத் திணைக்கள அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்ட இவரது விண்ணப்பம் அந்த நாட்டில் நிராகரிக்கப்பட்டதை அடுத்தே இவர் இவ்வண்ணம் திருப்பி அனுப்பப்பட்டார் என்பது குறிப்பிடத் தக்கது.

இலங்கை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்ட இந்த இளம் பெண் பொலிசாரின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு 14 நாட்களின் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜராக்கப்பட்டார். இவர் மீதான வழக்கை விசாரித்த நீதிபதி இவரை விடுதலை செய்துள்ளார்.

## மரண தண்டனைகள் நிறைவேற்றப்பட்டன

(முல்லைத் தீவு)

முல்லைத் தீவில் உள்ள புதுக் குடியிருப்பு என்ர பகுதியில் வைத்து புலிகளினால் மரண தண்டனை விதிக்கப்பட்ட பத்துப் பேருக்கும் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுவிட்டதாக அங்கிருந்து லண்டனுக்கு கிடைக்கும் கடிதங்கள் மூலம் அறியமுடிகிறது.

இவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது பற்றிய செய்தி ஈழ பூமியில் வெளி

தொடர்ச்சி 5ம் பக்கம்

## ஜனாதிபதித் தேர்தல் ஆட்சேப மனு வழக்கு தோல்வி - ஸ்ரீமா செலவுத்தொகை செலுத்துவர்

(கொழும்பிலிருந்து சேகரன்)

ஜனாதிபதி தேர்தல் ஆட்சேப மனு மீதான தீர்ப்பு புரட்டாதி மாதம் முதலாம் திகதி உயர் நீதிமன்றத்தில் வழங்கப்பட்டுள்ளது.

மூன்று வருடங்களுக்கு முன்னர் நடந்த ஜனாதிபதி தேர்தலின் போது மோசடிகள் இடம் பெற்றதாகவும் கணிசமான அளவு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவாளர்கள் வாக்குச் சாவடிகளுக்கு செல்ல முடியவில்லை எனவும் ஆளுங்கட்சிக் கெதிராக குற்றஞ்சாட்டி வழக்குத் தொடரப்பட்டது தெரிந்ததே.

மூன்று வருடங்களாக நடைபெற்ற இந்த வழக்கின் தீர்ப்பு 3000 பக்கங்களுக்கும் மேலானது. இந்த வழக்கின் தீர்ப்பு வழங்கப்படுவதற்கு முன் கொழும்பு மற்றும் சுற்றுப் புற பகுதிகள் யாவும் பாதுகாப்புக் கருதி பொலிஸ் காவல் போடப்பட்டிருந்தது. வழக்கின் தீர்ப்பை முன்னிட்டு ஏற்படக்கூடிய பதட்டத்தைத் தீர்க்கவே இவ்வாறு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததாத பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருந்தது.

இந்த வழக்கினை விசாரித்த ஐந்து உயர் நீதிமன்ற நீதியரசர்களும் ஜனாதிபதி பிரேமதாஸ ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டது சரியென்று தீர்ப்பு வழங்கியுள்ளனர். அது மட்டுமன்றி இந்த வழக்குக்கு செலவு செய்த மொத்தச் செலவையும் ஸ்ரீ மாவோ பண்டாரநாயக்க செலுத்தவேண்டும் என்று நான்கு நீதிபதிகள் தீர்ப்பு வழங்கியுமுள்ளனர்.

இந்த வழக்கின் தீர்ப்பில் கணிசமான அளவு மக்கள் வாக்குச் சாவடிகளுக்குச் செல்லவில்லை என்பதை ஏற்றுக் கொண்ட இந்நீதிமன்றம் இவ்வாறு வாக்களிக்கத் தவறியவர்களில் பெரும்பான்மையானோர் ஸ்ரீமாவோ பண்டார நாயக்காவுக்கு வாக்களித்திருப்பர் என்பதை ஸ்ரீமாவோ நிரூபிக்க வில்லை என்று குறிப்பிட்டுள்ளது.

இது பற்றிக் கருத்து தெரிவித்த ஸ்ரீ மாவோ பண்டார நாயக்க இத்தீர்ப்பு ஒருப

தொடர்ச்சி 2ம் . பக்கம்

## கருணாநிதி அறிக்கை.

(இந்தியா)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கோ அல்லது இலங்கையில் இருக்கும் எந்தத் தீவிர வாதக் குழுக்குகளுக்கமோ தாம் ஆதரவளிப்பதில்லை என்று குறிப்பிட்டிருப்து இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் தி.மு.கா. கொண்டிருக்கும் கொள்கையில் ஏற்பட்டிருக்கும் மாற்றமாக கருதிவிட முடியாது என்று கருணாநிதி குறிப்பிட்டுள்ளார்.

ராஜீவ், மற்றும் பத்மநாபா போன்றோரின் கொலைகளுக்குப் பின் தனது தொடர்பை புலிகளுடன் விலக்கிக் கொண்டது சந்தர்ப்ப வாதமோ அன்றி உள்நோக்கமோ கிடையாது என்று கருணாநிதி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## பொதுமக்கள் பலர் பலி
### சாய்ந்தமருதுவில் குண்டுவெடிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் ஒன்றான சாய்ந்த மருது என்ற இடத்தில் சைக்கிளில் இருந்த ஐஸ் பெட்டி ஒன்றினுள் பொருத்தப்பட்டிருந்த குண்டு ஒன்று வெடித்துள்ளது.

சந்தைப் பகுதியில் வைக்கப்பட்டிருந்த இக்குண்டு வெடி... இடத்திலேயே உயிர் நீத்துள்ளனர். மேலும் 40 பேர் அளவில் காயப்பட்டுள்ளனர் என்றும் தெரியவந்துள்லது. இக்குண்டு வெடிப்புக்கு புலிகளை அரசு குற்றம் சாட்டியிருப்பினும் இது அரசின் வேலையே என்று பரவலாக பேசப்படுகின்றது.

இது போன்று திருமணை

Weddings - Birthdays & ALL Your Special Events
☹Video Filming☹
☺Contact Expo On 081 672 6629☺
EXPO
☞ Quality With Experts
*Video Filming * Computer Image Processing * Computer Graphics*
*Video Special Effects * Video Editing * Audio Dubbing*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்